# பாட்டாளி சிந்தனை

Volume 25 No. 11

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

**SUCI**

July 2015

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


## சொத்து குவிப்பு வழக்கில் ஜெயலலிதா விடுதலை

# சட்டம் தன் கடமையை செய்கிறதா?

வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவித்த வழக்குவிசாரணை நீதிமன்றத்தில் முடிவுக்கு வருவதற்கு ஆன காலம் 19 ஆண்டுகள். சட்டம் தனது கடமையை ஆமைவேகத்தில் செய்ததை சகித்துக்கொண்டு "இறுதியில் தர்மம் வெல்லும்" என்று 19ஆண்டுகள் பொறுமையோடு மக்கள் நீதித்தராசின் முள்ளை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர். யுகம் போன்ற காத்திருப்பு கடந்த செப்டம்பர் 27ம் தேதி முடிவுக்கு வந்து, குற்றம் நிருபணமாகி, ஜெயலலிதாவிற்கும் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மற்ற மூவருக்கும் தண்டனை வழங்கப்பட்டது. இதனால் ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை இழந்தார். பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இத்தீர்ப்பை எதிர்த்து கர்நாடக உயர்நீதிமன்றத்தில் ஜெயலலிதாவும் மற்றவர்களும் மேல்முறையீடு செய்தனர். ஆரம்பத்தில் அவரை பெயிலில் விடுவிப் பதற்குக்கூட மறுத்த நீதிமன்றம் விடுமுறைக்குப் பின் நீதிமன்றம் திறக்கப்படும்வரை கூட காத்திருக்க அவகாசமின்றி அவசரகதியில் விடுமுறை நீதிமன்றத்திலேயே விசாரித்து தீர்ப்பளித்தது. 19 ஆண்டுகள் விசாரித்து குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்ட இவ்வழக்கில் வெறும் நான்கு மாதங்களுக் குள்ளாகவே குற்றமற்றவர் என மேல்முறையீட்டில் அளிக்கப்பட்ட தீர்ப்பு அனைவரின் புருவங்களையும் உயர்த்தி யுள்ளது. நீதித் துறையின்மீது மக்கள் கொண்டிருந்த கொஞ்சநஞ்ச மரியாதையையும் நம்பிக்கையையும் குழிதோண்டி புதைத்துவிட்டது. சாமானிய மனிதன் செய்யும் சிறுசிறு குற்றங் களுக்காக அவன்மீது புலிபோல பாயும் சட்டம் அதிகாரத்தி விருப்போர், செல்வாக்கு மிக்கவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர்களுக்கு சாதகமாக செயல்படுவது ஏன்? சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்று அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டுள்ள வாசகம் ஏட்டளவில் மட்டுமே இருப்பது ஏன்? இதுபோன்ற கேள்விகளுக்கு விடைதேடும்முன்பு ஜெயலலிதா மீதான வழக்கின் வரலாறு பற்றியும் இந்தியாவில் நீதித்துறையின் செயல்பாடுகள் குறித்தும் சுருக்கமாகக் காண்போம்.

### சொத்துக்குவிப்பு வழக்கின் வரலாறு

1991ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுடன் இணைத்து நடத்தப்பட்ட தமிழக சட்டமன்றத் தேர்தலில் அஇஅதிமுக வெற்றி பெற்றதையடுத்து முதன்முறையாக ஜெயலலிதா தமிழக முதல்வரானார். ஜெயலலிதாவுடன் நெருக்கமான உறவு கொண்டிருந்த அப்போதைய ஜனதாக்கட்சி தலைவரான சுப்ரமணிய சுவாமி வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக குற்றஞ்சாட்டி ஜெயலலிதாமீது 1996ல் வழக்கு தொடுத்தார். 1996ம் ஆண்டு தன் வளர்ப்பு மகன் சுதாகரனின் திருமணத்தின்போது ஜெயலலிதா காட்டிய பகட்டு பொதுமக்களிடம் கடும் வெறுப்பை உருவாக்கியது. சுப்ரமணிய சுவாமி காட்டிய மதிப்பீட்டின்படி ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 66.65 கோடி ரூபாயாகும். 18 ஆண்டுகளுக்குப்பின் இதன் மதிப்பு 4 அல்லது 5 மடங்கு அளவிற்கு அதிகரித்திருக்கும் என்பதில் ஐயமேதுமில்லை. இந்த சொத்துக்குவிப்பு வழக்கு மட்டுமின்றி வருமானவரி ஏய்ப்பு வழக்கு, ப்ளஸன்ட் ஸ்டே ஹோட்டல் வழக்கு, டான்சி நிலபேர ஊழல் வழக்கு என பல்வேறு ஊழல் வழக்குகள் அவர்மீது தொடரப்பட்டன. இவற்றிலிருந்து எப்படியோ வெளிவந்துவிட்ட ஜெயலலிதா வினால் இந்த வழக்கை மட்டும் தனக்கு சாதகமாக முடிக்க முடியவில்லை. இதற்கிடையே அவர் மீண்டும் 2001 மற்றும் 2011ம் ஆண்டுகளில் தமிழக முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலமைச்சர் பதவியின் அதிகாரத்தைப் பயன் படுத்தி தனது செல்வாக்கை பெருக்கிக் கொண்டார்.

இதை கவனித்த உச்ச நீதிமன்றம் இவ்வழக்கு தமிழ்நாட்டில் நடுநிலையோடு நடைபெறாது எனக் கூறி அதை தமிழ்நாட்டிலிருந்து கர்நாடகத் திற்கு மாற்றியது. இவ்வழக்கின் சிறப்பு அரசு வழக்கறிஞராக திரு பி வி ஆச்சார்யாவை நியமித்து கர்நாடக அரசு உத்தரவிட்டது. பல்வேறு சட்டச் சிக்கல்களையெல்லாம் கடந்து, ஒருவழியாக 2010ம் ஆண்டில் கர்நாடகாவிலுள்ள சிறப்பு நீதிமன்றத்தில் இவ்வழக்கு வேகம் பிடித்தது.

ஆயினும் ஜெயலலிதா தரப்பினர் வாய்தாக்கள் வாங்கியும் நேரில் ஆஜராவதிலிருந்து விலக் களிக்கக்கோரி மனுசெய்தும், மனு நிராகரிக்கப் பட்ட பட்சத்தில் இதைஎதிர்த்து மேல்முறையீடுகள் செய்தும் காலங்கடத்தினர். இவ்வழக்கை கிட்டத் தட்ட முடிவுக்குக் கொண்டு வந்த திரு ஆச்சார்யா இறுதியில் ராஜினாமா செய்ய நேர்ந்தது. அப்போது கர்நாடகத்தில் ஆட்சியிலிருந்த பிஜேபி அரசாங்கம் இவரது ராஜினாமாவை ஏற்றுக் கொண்டது.

'உச்ச நீதின்ற வழிகாட்டுதல்களின்படி' திரு பவானிசிங் என்பவரை சிறப்பு அரசு வழக்கறிஞராக நியமனம் செய்தது. குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றங்களை நிரூபிக்க வேண்டியது அரசு வழக்கறிஞரின் கடமை என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் பவானி சிங்கோ தனது கடமையை எதிர்மாறாக செய்தார் எனக் கூறப்பட்டது. ஜெயலலிதாவுக்கும் பிற மூவருக்கும் சாதகமாக, எவ்வளவு காலம் முடியுமோ அவ்வளவு காலம் வழக்கை இழுத்தடித்தார். இந்நிலையில், இவ்வழக்கை விசாரித்து வந்த நீதிபதி ஓய்வுபெறவே, அவரிடத்தில் நீதிபதி ஜான் மைக்கேல் குன்ஹா நியமிக்கப்பட்டார். நேர்மையும் நுணுக்கமான விவரங்களை அலசி ஆராயும் மனப்பான்மையும் கொண்ட குன்ஹா பதவி ஏற்றபின் வழக்கின் விசாரணை தொடங்கியது. 27.09.2014 அன்று தீர்ப்பு வழக்கப்பட்டது. இறுதியில் செப்டம்பர் 27, 2014 அன்று அதிமுக தலைவருக்கு எதிராக வழங்கிய தீர்ப்பில் ஜெயலலிதா குற்றவாளி எனவும் நீதி பரிபாலனத்தின் நடைமுறைச் சிக்கல்களை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு 18 ஆண்டுகாலம் தண்டனையைத் தள்ளிப் போட்டதற்காகவும் ஜெயலலிதாவிற்கு நீதிபதி குன்ஹா கடும் கண்டனம் தெரிவித்தார். "தங்களது வங்கிக் கணக்கில் கணக்கு காட்டப்படாத எக்கச்சக்கமான தொகை வரவு வைக்கப் பட்டதற்கு திருப்தி கரமான விளக்கமளிக்க குற்றவாளிகள் தவறி விட்டனர். இந்த வரவுக்கு ஆதாரமாக அவர்கள் தாக்கல்செய்த பிரமாணக் கடிதங்கள் (Confirmatory Letters) போலியானவை என்றும் பொய் யானவை என்றும் நிரூபண மாகியுள்ளது. இத்தொகைகள் அளித்த நபர்களின் அடையாளங்கள் நிரூபிக்கப் படவில்லை. ரொக்க வரவில் முடிந்த பணப்பரிமாற்றங்களும் நிரூபிக்கப்படவில்லை. லாப நஷ்ட கணக்குகளும் வரவு செலவு பட்டியலும் அதில்காணும் வரவுகளும் (Returns) பொய்க்கணக்காக எழுதப்பட்டிருப்பது சாட்சியங் களுடன் நிரூபண மாகியுள்ளது. தங்களது வங்கிக் கணக்கில் காணப்படும் விளக்கம் அளிக்கப்படாத வரவுகளுக்கு விளக்கம் அளிக்கும் வகையில்தான்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## ஜனநாயக இயக்கத்திற்கு பலத்தஅடி கொடுக்க மற்றுமொரு கறுப்புச் சட்டத்தை கொண்டுவரும் பாசிச நடவடிக்கையை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கடுமையாக கண்டிக்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஜூன் 27, 2015 அன்று விடுத்த அறிக்கை:*

வேலை நிறுத்தம் அல்லது ஹர்த்தாலின்போது அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்களை பொறுப்பாக்கும் மற்றொரு கறுப்புச் சட்டத்தை மத்திய பிஜேபி தலைமை யிலான அரசாங்கம் நிறைவேற்றப் போவதாக ஊடகங்களில் செய்தி வந்துள்ளது. தலைவர் களால் அழைப்பு விடுக்கப்படக்கூடிய வேலை நிறுத்தம் அல்லது ஹர்த்தாலின்போது அரசாங்க சொத்துக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால் சந்தைமதிப்பிற்கேற்ப அச்சேதத்திற்குரிய இழப்பீட்டை அத்தலைவர்கள் வழங்க வேண்டும் என்றும் இவ்வுத்தேச சட்டம் வலியுறுத்துகிறது. அரசாங்க சொத்திற்கு சேதம் விளைவித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட அத்தலைவர்கள் குற்ற மற்றவர்கள் என தங்களைத் தாங்களே நிரூபித்துக் கொள்ள வேண்டும். தற்போதைய "பொது சொத்துக்கு சேதம் விளை விப்பதை தடுக்கும் சட்டம் – 1984"ல் சில புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்ட திருத்தங்களின் மீது கருத்துக்கள் கோரி வரைவுச் சட்ட நகல் ஒன்று ஏற்கெனவே மாநிலங் களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

வேலை நிறுத்தம் அல்லது ஹர்த்தால்மூலம் அதிருப்தியை பதிவுசெய்யும் வடிவங்களை முழுமையாக தடைசெய்து, போராடும் அடிப்படை உரிமையை பறித்து, எதிர்ப்புக் குரலை நசுக்குவதன் மூலம் ஜனநாயக போராட்டத்தின்மீது ஒரு கடும் தாக்குதலை தொடுக்கும் இந்த பாசிச நடவடிக்கையை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம்.

இதுபோன்ற மக்கள் விரோத சட்டத்தை அரசாங்கம் வடிவமைப்பதை கைவிடுமாறும் மக்கள் உடனடியாக தங்கள் அணிகளை நெருக்கிக்கொண்டு இந்நடவடிக்கையிலிருந்து பின்வாங்க அரசாங் கத்தை நிர்ப்பந்திக்கும் சக்திவாய்ந்த இயக்கத்தை கட்டுமாறும் அறைகூவல் விடுக்கிறோம்.

**ஆகஸ்ட் 5**

**பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்**

## சிப்தாஸ் கோஷ்

**அவர்களின்**

## 39வது நினைவு தினம்

## பொதுக்கூட்டம்

**ஆகஸ்ட் 8, 2015 தேனி**

**தலைமை தோழர் A ரெங்கசாமி**

தமிழ்நாடு மாநில செயலாளர்

**சிறப்புரை தோழர் C K லூகோஸ்**

மத்திய கமிட்டி உறுப்பினர்

**அனைவரும் வருக!**

# நீதித்துறையும் மத்திய குற்றப் புலனாய்வு ஏஜென்ஸிகளும் அரசியல் புள்ளிகள், தொழிலதிபர்கள், புகழ்பெற்றவர்கள் என்று அழைக்கப்படக்கூடியவர்கள், உயர்மட்ட அதிகாரிகள் ஆகியோரிடம் மென்மையாக நடந்துகொள்கின்றன

1ம் பக்கத் தொடர்ச்சி

இந்த பொய்க்கணக்குகள் எழுதப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒருவேளை குற்றம் இழைக்காது இருந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்குக்கூட இடமில்லாத வகையில் தங்கள் தரப்பை நியாயப்படுத்துவதற்கு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தவறிவிட்டனர். இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு "இவ்வழக்கு மிகக் கடுமையான தண்டனையை வழங்கக் கோருவதாக நான் கருதுகிறேன்" என்று கூறிய நீதிபதி குன்ஹா 4 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 100 கோடி ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

ஜெயலலிதாவிற்கு கிடைத்த தண்டனையை நீதியின் வெற்றி என்றும் குற்றமயமாக்கப்பட்ட அரசியலுக்கு எதிரான தீர்ப்பு என்றும் அப்போது பலரும் போற்றினர். பதவியிலுள்ள செல்வாக்கு மிக்க முதலமைச்சரை பதவியிழக்கச் செய்து இத்தகையதொரு தீர்ப்பை அளிப்பதற்கு நீதிபதி குன்ஹா தனது உயிரையே பணயம் வைத்துள்ளார் என்றும் இந்திய நீதித்துறையில் ஒரு புதிய மைல்கல்லை ஏற்படுத்தியுள்ளார் என்றும் சில ஊடகங்கள் உட்பட பலரும் பாராட்டினர். பற்றி எரியும் அரசியல் சூழலில் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் குற்றம் நிரூபிக்கப்பட்டு அவர் குற்றவாளி என்று தீர்ப்பளித்தாலும் இப்படிப் பட்ட கடுமையான தண்டனை வழங்கு வதற்கு ஏராளமான துணிவு இருக்கவேண்டும் என்றனர்.

### தீர்ப்பிற்கு பின்

தீர்ப்பு வெளியான செப்டம்பர் 27ம் தேதியன்றே அவரும் மற்ற மூவரும் பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டனர். தீர்ப்பை எதிர்த்து ஜெயலலிதா மேல்முறையீடு செய்தார். முதலில் அவரது ஜாமீன் மனு அக். 7, 2014 அன்று கர்நாடக உயர்நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டது. உயர்நீதிமன்ற நீதிபதி சந்திரசேகர் அவர்கள், ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப் பட்ட குற்றவாளிகளை சுலபமாக வெளியில் விட்டுவிடமுடியாது என்றும் இதர ஊழல் வழக்குகளை முன்னுதாரணமாகக்கொண்டு ஜெயலலிதாவிற்கு ஜாமீன் வழங்குவதற்கான சாத்தியம் இல்லை என்றும் கூறினார். அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையை நிறுத்திவைக்க முடியாது என்றும் குறிப்பிட்டார். ஜாமீன் மனு வழக்கில், ஜாமீன் வழங்கக்கூடாது என்று முதலில் வாதிட்ட அரசு வழக்கறிஞர் பவானிசிங் எழுத்துமூலம் சமர்ப்பித்த தனது வாதத்தில் "குற்றங்களின் கடுமையைக் கருதியும் குற்றவாளி களின் அந்தஸ்தை கணக்கில் கொண்டும் பார்க்கையில், தீர்ப்பும் தண்டனையும் நிறுத்தி வைக்கப்படுமானால் தனக்கு கிடைத்த சுதந்திரத்தை ஜெயலலிதா தவறாகப் பயன்படுத்து வார் என்றும், இந்த நீதிமன்றம் மேல்முறையீட்டு மனுவை பின்னர் தள்ளுபடி செய்யும்பட்சத்தில் தண்டனை பெறுவதற்காக குற்றவாளிகளைப் பிடிப்பது சிரமமாக இருக்கும் என்று அரசுத்தரப்பு நியாயமாக அஞ்சுகிறது என்றும் "குற்றவியல் நடைமுறை சட்டத்தின் பிரிவு 389(1)ன்படி தண்டனையைத்தான் நிறுத்திவைக்க முடியுமே ஒழிய, மேல்முறையீட்டுதாரர்கள் கோரியுள்ளது போல குற்றவாளி என்று அளிக்கப்பட்ட தீர்ப்பை நிறுத்திவைக்க முடியாது" என்றும் குறிப்பிட்டி ருந்தார். ஜாமீன் வழங்கு வதற்கு எதிராக இவ்வளவு கறாராக வாதாடிய பவானிசிங், என்ன காரணத்தாலோ ஒரே வாரத்தில் அந்தர்பல்டி அடித்தார். ஜாமீன் வழங்குவதற்கு எதிராக அரசுத் தரப்பில் வாதம் ஏதும் இல்லை என்றும் நிபந்தனை ஜாமீன் வழங்குவதில் ஆட்சேபம் ஏதும் இல்லை என்றும் தலைகீழாக வாதிட்டார்.

ஜாமீன் வழங்குவதை மறுத்த கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி வழக்கை தள்ளுபடி செய்து வழங்கிய தமது தீர்ப்பில்: "இது சம்மந்தமாக அரசு வழக்கறிஞர் தாக்கல் செய்வதற்கு ஏதேனும் ஆட்சேபணைகள் இருக்கிறதா என்று கேட்கப் பட்டபோது, ஜாமீன் வழங்குவது சம்பந்தமாகவும் தண்டனையை நிறுத்திவைப்பது சம்பந்தமாகவும் வாதிட ஏதுமில்லை என்றும், இந்த வழக்கின் தன்மைக்கேற்றவாறும் நிபந்தனைகள் விதித்தும் குற்றவாளி ஜாமீனில் விடுவிக்கப்படலாம் என்றும் அவர் வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டிருக் கிறார். ஆனால், அவர் ஏற்கெனவே எழுத்துப் பூர்வமாக கொடுத்த ஆட்சேபணைகளை வலியுறுத்தாதது குறித்து எதுவும் தெரிவிக்க வில்லை" என்றும் "ஊழல் மனித உரிமை மீறல்களுக்கும் பொருளாதார ஏற்றத் தாழ்வு களுக்கும் வழிவகுக்கிறது" என்றும் குறிப்பிட்டி ருந்தார்.

அரசு வழக்கறிஞர் ஆட்சேபம் தெரிவிக்காத நிலையில்கூட ஜெயலலிதாவின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்த கர்நாடக உயர்நீதிமன்றம், "தண்டனையை நிறுத்தி வைப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது" என்றும் எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் தண்டனையை நிறுத்திவைத்து அதைத் தொடர்ந்து ஜாமீன் வழங்குவதற்கு உகந்த வழக்கு இதுவல்ல" என்றும் தனது ஆணையில் தெரிவித்தது. "ஊழல் என்பது மனித உரிமை மீறலாகும். பொருளாதார சமமின்மைக்கு இட்டுச்செல்கிறது" என்றும் அத்தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டிருந்தார்.

### வழக்கிலிருந்து விடுவிப்பு

உயர்நீதிமன்றம் ஜாமீன் வழங்க மறுத்தபின் ஜெயலலிதாவுக்கு இருந்த கடைசி புகலிடம் உச்சநீதிமன்றத்தில் ஜாமீனுக்காக சிறப்பு விடுப்பு சமர்ப்பிப்பதாகும். இம்மனுமீது 18. 10. 2014 அன்று தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் ஜெயலலிதாவின் தண்டனையை நிறுத்திவைத்தும் அவருக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கியும் உத்தரவிட்டது. கர்நாடக உயர்நீதிமன்றத்தில் உள்ள மேல் முறையீட்டு வழக்கை தாமதப்படுத்துவதற்கு முயற்சிகள் செய்யமாட்டோம் என்று ஜெயலலிதா விடமிருந்து உறுதிமொழியைப் பெற்றுக்கொண்டே உச்சநீதிமன்றம் ஜாமீன் வழங்கியது.

மேல்முறையீட்டு மனுமீதான விசாரணை ஜனவரி 2015ல் தொடங்கியபோது, ஒரு சர்ச்சை கிளம்பியது. அரசு வழக்கறிஞரான பவானி சிங்கின் நியமனம் முறையானதுதானா என்பதே அந்த சர்ச்சையாகும். அரசு சார்பில் வாதிடு வதற்காக நியமிக்கப்பட்டவர்தான் பவானிசிங். உயர்நீதிமன்றத்தில் இதே வழக்கின் மேல் முறையீட்டில் அரசு தரப்பில் அவர் வாதிடலாமா என்ற சர்ச்சை கிளம்பியது. இந்த விவகாரத்தை ஆய்வுசெய்த உச்ச நீதிமன்றம் அவரது நியமனம் செல்லாது என தீர்ப்பளிக்கவே, கடைசி நிமிடத்தில் மீண்டும் திரு பி வி ஆச்சார்யா அரசு வழக்கறிஞராக நியமிக்கப் பட்டார்.

18 ஆண்டுகளாக கீழ்க்கோர்ட்டில் இழுத் தடிக்கப்பட்ட இவ்வழக்கின் மேல்முறையீடு வெறும் நான்கே மாதங்களில் முடிவிற்கு வந்தது. குற்றவாளி என தீர்ப்பளித்து தண்டனையும் வழங்கி சிறப்பு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நிராகரித்து உத்தரவிட்ட உயர்நீதிமன்றம் ஜெயலலிதாவையும் மற்ற மூவரையும் வழக்கி லிருந்து விடுவித்தது. இத்தீர்ப்பை கடுமையாக விமர்சித்த அரசு வழக்கறிஞர் ஆச்சார்யா, உயர்நீதிமன்றத்தில் அரசுத்தரப்பு வாதங்களை முன்வைப்பதற்கு வாய்ப்புக்கள் அளிக்கப்படாமல் ஒருதலைப்பட்சமாக இத்தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளதாக பகிரங்கமாக தெரிவித்தார். நீதிபதி கணிதப்பிழை செய்திருப்பதாகவும் கூறினார்.

### தப்புக் கணக்கு தீர்ப்பு

சட்டவிரோதமாக கணக்கில் காட்டப்படாமல் ஜெயலலிதா சேர்த்த சொத்துக்களின் மதிப்பு அவரது வருமானத்தில் வெறும் 8 சதவிகிதமே என்றும் வருமானவரிச் சட்டத்தின்படி வருமானத் திற்கு அதிகமாகச் சேர்க்கலாம் என அனுமதிக்கப் பட்ட 10 சதவீதத்தைக் காட்டிலும் இது குறைவானதே என்றும் மேல்முறையீட்டு மனு மீது உத்தரவு பிறப்பித்த கர்நாடக உயர்நீதி மன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது. 24கோடி ரூபாய்கள் பெறுமானமுள்ள கடன்களை ஜெயலலிதா பெற்றுள்ளதாக உயர்நீதிமன்ற நீதிபதி சி ஆர் குமாரசாமி தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், உண்மையில் கடன்தொகை 10 கோடி ரூபாய்கள் மட்டுமே என்று வழக்கறிஞர் ஆச்சார்யா கூறினார். இதன்மூலம் 14 கோடி ரூபாய் தவறாக நியாயப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல், வருமானத்திற்கு அதிகமாக ஜெயலலிதா குவித்த சொத்தின் மதிப்பு உயர்நீதிமன்றம் குறிப்பிட் டுள்ளதுபோல 8.12% அல்ல என்றும் 76%அளவிற்கு இது அதிகமானது என்றும் ஆச்சார்யா கூறினார்.

எவ்வாறெல்லாம் தப்புக்கணக்கு போடப் பட்டுள்ளது என்று கீழே தரப்பட்டுள்ளது:

1992ம் ஆண்டில் தனது 44வது பிறந்தநாள் விழாவின்போது 1.5 கோடி ரூபாய் பெறுமான முள்ள பிறந்தநாள் பரிசுகளைப் பெற்றதாக ஜெயலலிதா தனது வருமானக்கணக்கில் குறிப்பிட்டுள்ளார். ஆனால், ஊழல் தடுப்புச் சட்டம் 1988ன்படி அலுவல்ரீதியான தொடர்பு உள்ளோரிடமிருந்து ஒரு அரசு அலுவலர் பரிசுகள் பெறுவது குற்றமாகும். எனவே, இவ் விவகாரம் மத்திய புலனாய்வுத் துறையின் புலனாய்வில் உள்ளது.

தனக்கு சொந்தமான ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்திலிருந்து 1991 முதல் 1996 வரையிலான 5 ஆண்டுகளில் 1.15 கோடி ரூபாய் வருமானம் ஈட்டியதாக ஜெயலலிதாவே ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால், நீதிபதியோ எவ்வித ஆதாரமும் இன்றி, இந்த வருமானம் 4 கோடி ரூபாய் என்று பட்டவர்த்தனமாக தவறிழைத் துள்ளார். ஏறக்குறைய 4 மடங்கு அதிகமாக கணக்கிடப்பட்டது எவ்வாறு என்று நீதிமன்றம் எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

இதெல்லாம் ஒன்றுமில்லை என்பதுபோல் உயர்நீதிமன்றம் மற்றொரு பெரும் கணிதப்பிழை செய்துள்ளது. ஜெயலலிதாவுக்கும் அவரது கூட்டாளிகளுக்கும் சொந்தமான கட்டிடங்கள் கட்டுமான மதிப்பை கணக்கிடுவதில் செய்யப் பட்ட பிழைதான் இது. சுமார் 1.6 லட்சம் சதுரஅடி அளவிற்கான கட்டிடங்கள் தோராயமாக 27 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. வருமானத்திற்கு அதிகமாக குவித்ததாக சொல்லப்படும் 66 கோடி ரூபாயில் சுமார் மூன்றில் ஒரு பங்காகும் இது. ஆனால் இக்கட்டிடங்கள் வெறும் 5 கோடி ரூபாயில் கட்டப்பட்டதாக உயர்நீதிமன்ற தீர்ப்பு தெரிவிக்கிறது. இதன்மூலம் சட்டவிரோதமாக சேர்க்கப்பட்ட சொத்தில் மூன்றில் ஒரு பங்கை நீதிமன்றம் நீக்கிவிட்டது.

கட்டுமான மதிப்பு வெறும் 5 கோடி ரூபாய் என்று உயர்நீதிமன்றம் முடிவு செய்தவிதம் விந்தையிலும் விந்தையாக உள்ளது. இவ்வாறு மதிப்பிடப்பட்ட கட்டிடங்கள் திருநெல்வேலியில் உள்ள பண்ணை பங்களாக்கள் முதல் சென்னையின் மையப்பகுதியில் உள்ள பங்களாக்கள் அலுவலகங் கள் வரை பலதரப் பட்டவையாகும். இவ்வாறு பலதரப்பட்ட கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒரே மாதிரியாக சதுர அடிக்கு ரூ.250 என்று கட்டுமான மதிப்பு வைக்கப்பட்டு 5 கோடி ரூபாய் என்று கணக்கிடப் பட்டுள்ளது. சதுரஅடி ரூ.250 என்று எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது என்பதை அறிந்தால் கோபத்தில் கொந்தளித்துப் போவீர்கள்!

காவலாளி இருக்கும் சிறு கட்டிடமான சென்ட்ரி ஷெட் எனப்படும் ஷெட் கட்டுவதற்கு ஆகும் சராசரி செலவினம் பொதுப்பணித்துறை அளித்த கொட்டேஷனை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றம் இவ்வாறு கணக்கிட்டுள்ளது. 1000 பக்கங்கள் கொண்ட தீர்ப்பின் 786வது பக்கத்தில் இந்த ரகசியம் புதைந்துள்ளது. வெறும் ஆஸ்பெஸ்டாஸ் கூரைபோட்டு ஒற்றைக்கல் சுவர் எழுப்பி மிகச் சாதாரணமாக கட்டப்படும் சென்ட்ரி ஷெட்டுக்கு ஆகும் செலவுதானா சொகுசு பங்களாக்களுக்கும் அலுவலகங்கள் கட்டுவதற்கும் ஆகும்? எப்படிப்பட்ட புரட்டு! இந்த சென்ட்ரி ஷெட்டுக்கான கட்டுமான செலவாக பொதுப்பணித்துறை ரூ.310 என்றுதான் கொடுத்துள்ளது. நீதிமன்றம் அதையும் குறைத்து ரூ.250 என்று கணக்கிட்டுள்ளது. இதற்கான காரணமும் குறிப்பிடப்படவில்லை. "சென்ட்ரி ஷெட்டுக்கான கட்டுமான செலவை எப்படி இந்த சொகுசு கட்டிடங்களுக்கு பொருத்தமுடியும் என்று என்டிடிவி க்கு அளித்த பேட்டியில் கேள்வி எழுப்பிய அரசு வழக்கறிஞர் ஆச்சார்யா, இவற்றையெல்லாம் கணக்கிற்கொண்டு பார்க்கையில் வருமானத்தைவிட 200 சதவிகிதம் அதிகமாக ஜெயலலிதா சொத்துக் குவித்துள்ளார்

தொடர்ச்சி 3ம் பக்கம்

# நீதித்துறை முன்னபிப்பிராயம், ஊழலிலிருந்து விடுபட்டிருக்கவில்லை என பல்வேறு நீதிபதிகளே கூறுகின்றனர்

2ம் பக்கத் தொடர்ச்சி

என்றும் கூறினார். மேலும், அவரை விடுவித்து அளித்த தீர்ப்பிற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கு போதுமான ஆதாரங்கள் வலுவாக இருப்பதாகவும் கூறினார். உயர்நீதிமன்றத் தீர்ப்பு தவறாக கணக்கிடப் பட்டதன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதால் இதற்கு எதிராக மேல்முறையீடு செய்ய வேண்டுமென கர்நாடக அரசு தலைமை வழக்கறிஞர் பரிந்துரைத்துள்ளார். அதனடிப் படையில் இவ்வழக்கு தற்போது உச்சநீதி மன்றத்தில் 22. 6. 2015 அன்று கர்நாடக மாநில அரசால் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு ஜூலை முதல் வாரத்தில் விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இப்போதைக்கு ஜெயலலிதா மீண்டும் தமிழக முதல்வராக பதவியேற்றுள்ளதோடு, தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே உள்ள நிலையில், சென்னை ஆர் கே நகர் தொகுதியில் ஒரு இடைக்கால தேர்தலைத் திணித்து, அங்கு அவர் வெற்றி பெற்றுள்ளார்.

### தண்டனையிலிருந்து நழுவிச்செல்வதே அரசியல் பெரும்புள்ளிகளின் வாடிக்கை

இவ்வழக்கின் போக்கு குறித்து இவ்வளவு விரிவாக எடுத்துரைப்பதற்கு காரணம் உள்ளது. நாம் சில உண்மைகளை கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது. எல்லா வழக்குகளிலும் சட்டம் தனது கடமையை செய்கிறதா? சட்டத்தின்முன் அனைவரும் சமமா அல்லது அரசியலிலும் பணத்திலும் செல்வாக்கு மிக்கவர்களுக்கு சட்டம் வளைந்து கொடுக்கிறதா என்ற கேள்விகளும் ஐயங்களும் நம் மனதில் எழுகின்றன. ஏனெனில், அரசியல் பெரும்புள்ளிகள், பெரும் தொழிலதிபர்கள், பிரபலங்கள், உயர் அரசு அதிகாரிகள் போன்றோர் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்குகளில் நீதித்துறையும் மத்திய புலனாய்வுத் துறையும் சமீப காலங்களில் மிக அதிகமாக பாரபட்சமும் சலுகையும் காட்டிவருகின்றன. குறிப்பாக, ஊழல் வழக்குகள், வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவிப்பு வழக்குகள், கொலைகள், இனப்படுகொலைகள், பயங்கரவாதத்திற்கு உதவிய வழக்குகள் மட்டுமின்றி நாட்டின் இறையாண்மைக்கு குந்தகம் விளைவிக்கும் வழக்குகளில்கூட இத்தகைய பாரபட்சங்கள் அப்பட்டமாக வெளிப்படுகின்றன. ஒருசில உதாரணங்களை இங்கே தருகிறோம்.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் முலாயம்சிங் யாதவ் மீது ஆறு ஆண்டுகளாக நிலுவையில் இருந்த வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கை 2013ம் ஆண்டு செப்டம்பரில் சிபிஐ முடித்துவிட்டது. 1993ம் ஆண்டு முதல் 2005ம் ஆண்டு வரையிலான 13 ஆண்டு காலத்தில் முலாயம் சிங்கின் சொத்துக்கள் உறவினர்களிட மிருந்து கடன்கள் பெற்றதன்மூலம் அதிகரித்தன என்பதற்கு போதுமான ஆதாரங்களை முலாயம் சிங் அளித்திருப்பதாகக் கூறி சிபிஐ இவ்வழக்கை முடித்தது. இங்கே கடன்கள் என்று குறிப்பிட்ட வைகளை இதே சிபிஐ ஏற்கெனவே 'பரிசுகள்' என வகைப்படுத்தியிருந்தது.

உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வரும் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவருமான மாயாவதி மீது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கு 2003ம் ஆண்டில் சிபிஐ ஆல் போடப்பட்டது. 2011ம் ஆண்டு இவ்வழக்கை தள்ளுபடி செய்து தில்லி உயர்நீதிமன்றம் ஆணையிட்டது. மாயாவதி குவித்த சொத்துக் களின் மதிப்பு பல நூறு கோடி ரூபாய்களைத் தாண்டும். ஆனால், தில்லி உயர்நீதிமன்றமோ, "தனது நன்கொடையாளர்கள் யார் என்பதை தெளிவாக அடையாளம்காட்டி தனது சட்டப்பூர்வக் கடமையை மாயாவதி நிறைவேற்றி யுள்ளார். அவர் பெற்ற பரிசுகள் அனைத்தும் அவரது கட்சி ஆதரவாளர்களால் அளிக்கப் பட்டவை" என்று தனது தீர்ப்பில் கூறிவிட்டது. இத்தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யவேண்டாம் என மத்திய அரசு முடிவெடுத்தது. ராஜ்யசபா எம் பி பதவிக்கு தாக்கல் செய்த வேட்புமனுவில் தனது சொத்துக்களின் மதிப்பு 111.26 கோடி ரூபாய் என்று மாயாவதி குறிப்பிட்டபோதும் மத்திய அரசு மேல்முறையீட்டுக்கு செல்லவில்லை. இறுதியில், 2012ம் ஆண்டு உச்சநீதிமன்றம் இவ்வழக்கை தள்ளுபடி செய்தது. அதேபோல், தாஜ் காரிடார் எனப்படும் நெடுஞ்சாலை கட்டுமானம் தொடர்பான ஊழல் வழக்கும் அவர்மீது போடப்பட்டது. ஆரம்பத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்திய இவ்வழக்கு பின்னர் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. இக்காலங்களில் மத்தியில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கம் ஆட்சியில் நீடித்திருப்பதற்கு முலாயம்சிங், மாயாவதி என இவ்விருவரின் ஆதரவு தேவைப்பட்டதால் அவர்கள் மீதான வழக்குகள் சர்வசாதாரணமாக தள்ளுபடி செய்யப்பட்டதாக அரசியல் வட்டாரங்களில் நம்பப்படுகிறது.

ஆந்திராவின் முன்னாள் முதல்வரான ஒய் எஸ் ராஜசேகர ரெட்டியின் மகனான ஒய் எஸ் ஆர் ஜெகன் மோகன் ரெட்டி தனது தந்தையின் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து 2004–2009 வரையிலான காலத்தில் சட்டவிரோதமாக பெருமளவில் சொத்து குவித்ததாக சிபிஐ அவர்மீது குற்றஞ்சுமத்தியது. அதேபோல், ஆதாயங்கள் பெறுவதற்காக ஜெகன்மோகனுக்கு சொந்தமான கம்பெனியில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளதாக சிபிஐ சிறப்பு நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்விரு வழக்குகளும் கேஸ் கட்டுகளின் இடுக்குகளில் புதையுண்டு கிடக்கின்றன.

சுமார் 2500 கோடி ரூபாய் மாட்டுத் தீவின ஊழல் வழக்கில் பீஹார் மாநில முன்னாள் முதல்வரான லாலு பிரசாத் யாதவுக்கு ராஞ்சி நீதிமன்றம் 2013ம் ஆண்டு செப்டம்பரில் 5 ஆண்டு சிறைத்தண்டனை வழங்கியது. ஆனால், இவ்வழக்கில் தண்டனை அளிக்கப்பட்ட ஏனையோருக்கு ஜாமீன் வழங்கப்பட்டதை காரணம்காட்டி உச்சநீதிமன்றம் அவருக்கும் ஜாமீன் வழங்கியது. சிபிஐ யும் இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. லாலு பிரசாத் யாதவ் காங்கிரஸ் தலைமையிலான ஐ மு கூட்டணியில் அங்கம் வகித்தவர் என்பது அனைவரும் அறிந்ததே.

ஆசிரியர் நியமனமுறைகேடு வழக்கில் ஹரியானாவின் முன்னாள் முதல்வரான ஓம் பிரகாஷ் சௌதாலாவிற்கு ஜனவரி 2010ல் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கி தில்லி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், தில்லி உயர்நீதி மன்றமோ மருத்துவ காரணங்களுக்காக மே 2013ல் ஜாமீனில் அவரை விடுத்தது. அப்பொழுது அவர் பிஜேபியுடன் நெருங்கிச் சென்று கொண்டிருந்தார் என்பது அனைவரும் அறிந்ததே.

ஒரிசா மாநிலம் தலபிராவில் உள்ள இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தை ஹிண்டால்கோ நிறுவனத்துக்கு சட்டத்திற்கு புறம்பாக ஒதுக்கீடு செய்ததற்காக முன்னாள் பிரதமரான மன்மோகன் சிங், நிலக்கரித்துறை செயலாளர் பிசி பரக், ஹிண்டால்கோ நிறுவனத் தலைவர் குமாரமங்கலம் பிர்லா ஆகியோருக்கு சிபிஐ சிறப்பு நீதிமன்றம் அனுப்பிய சம்மன்களையும் நீதிமன்ற நடவடிக்கைகளையும் நிறுத்திவைத்து சமீபத்தில் உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. 10.7 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடு நடந்ததாக சொல்லப்படும் இவ் ஊழல், பிரதமர் மன்மோகன் சிங்கின் கீழ் நிலக்கரித்துறை இருந்தபோது நடந்தது. "மேற்குறிப்பிட்ட ஒதுக்கீடு சம்பந்தமாக குற்றச்செயல்கள் செய்வதற்கு அங்கே மனங்களின் ஒற்றுமை இல்லை" என்றும் "பிரதமர் ஆஜராகக் கோரி அனுப்பப்பட்ட சம்மன் 'பொது காரண, காரியங்களின்' ஆய்வில் தேறவில்லை" என்றும் கூறி பிரதமர் மன்மோகன்சிங்கை இவ்வழக்கிலிருந்து உச்சநீதிமன்றம் விடுவித்து விட்டது. மேலும், ஹிண்டால்கோ நிறுவனத்திற்கு நிலக்கரி ஒதுக்கீடு செய்வது என்ற முடிவு நிர்வாக முடிவு என்றும் இதில் சட்டவிரோதம் எதுவும் இல்லை என்றும் தெரிவித்தது. அதாவது, சட்டத்திற்கு புறம்பாக குறிப்பிட்டதொரு தொழில் நிறுவனத்திற்கு அப்பட்டமாக சலுகைகாட்டி, அதன்மூலம் லட்சக்கணக்கான கோடிகளை அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தி னாலும்கூட, அத்தகைய நடவடிக்கை நிர்வாக முடிவின்படி மேற்கொள்ளப்பட்டால் அது ஊழல் என்று எடுத்துக்கொள்ளப்படாது என்று உச்சநீதிமன்றம் மிகத் தெளிவாக, அப்பட்டமாக இதன்மூலம் மக்களுக்கு தெரிவித்துவிட்டது.

மிகக் கொடூரமான குஜராத் இனப்படுகொலை வழக்கிலும் பல போலி என்கவுண்டர் வழக்குகளிலும் நரேந்திர மோடியும் அவரது சகாவான அமித்ஷாவும் விடுவிக்கப்பட்டதானது மேற்சொன்ன அனைத்தையும் மிஞ்சிவிட்டது. இந்த இனப்படுகொலைகளுக்கு எதிராக மக்கள் கருத்து திரண்டெழுந்ததால் இப்படுகொலை களில் அப்போதைய குஜராத் முதல்வரான நரேந்திரமோடியின் பங்கு என்ன என்பதை புலனாய்வு செய்வதற்கு தனது நேரடி கண்காணிப்பின்கீழ் சிறப்பு புலனாய்வுக் குழு அமைத்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. படுகொலைகள் நிகழ்ந்து ஆறாண்டு காலம் இழுத்தடிக்கப்பட்டபிறகு 2008ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக்குழு 2009ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கி, 2 ஆண்டு களுக்குப்பிறகு, 2011ஆம் ஆண்டு இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்தது. தனது ஆரம்பகட்ட அறிக்கையில், குற்றவியல் நீதி வழங்கல் முறையை கையாள்வதில் மோடி பெருமளவில் அரசியல் மற்றும் மதவாத அஜெண்டாக்களை கொண்டிருந்தார் என்று சிறப்பு புலனாய்வுக்குழு குறிப்பிட்டிருந்தது. இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கச் செய்வதற்கு மோடி அரசாங்கம் படுமோசமாக தவறிவிட்டது என்றும் குறிப்பிட்டிருந்த அவ்வறிக்கை கீழ்க்கண்ட வகைகளில் மோடி குற்றம் புரிந்ததாகவும் காட்டியிருந்தது: வகுப்புவாத மனப்பான்மை, உயர் அரசு பதவி வகிக்கும் நபருக்கு பொருத்தமற்றவகையில் பொறுப் பின்மையும் சற்றும் யோசிக்காத மனப்பான்மையையும் வெளிப்படுத்துகின்ற, முஸ்லீம் மக்களுக்கு எதிராக தூண்டிவிடும் வகையில் அமைந்த பேச்சுக்கள், முக்கியமான ஆவணங்களை அழித்தது, இந்து மதவாத சங் பரிவார் உறுப்பினர்களை அரசு வழக்கறிஞர் களாக நியமித்தமை, கலவரம் நடந்து கொண்டிருந்தபோது காவல் கட்டுப்பாட்டு அறைகளில் சட்டவிரோதமாக அமைச்சர்களை இருக்கச்செய்தது, நடுநிலை அதிகாரிகளைத் துன்புறுத்தியது போன்றவை அவையாகும். ஆனால், 2014ம் ஆண்டு பொதுத் தேர்தலில் நரேந்திர மோடியை பிரதமராக்குவது என்று இந்திய ஏகபோகங்கள் முடிவெடுத்ததும் திரைமறைவில் காய்கள் நகர்த்தப்பட்டதன் விளைவாக அதே சிறப்பு புலனாய்வுக்குழு அந்தர் பல்டி அடித்து மோடி மீது 'குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லை' என்ற வழக்கமான பல்லவியை பாடி அவரை குற்றமற்றவர் எனக் கூறிவிட்டது.

குஜராத் மாநிலத்து மோடி அமைச்சரவையில் உள்துறை அமைச்சராக இருந்த அமித்ஷாவுக்கும் நீதிமன்றத்தின் கருணை கிட்டியது. அவருக்கு எதிராக ஏராளமான சாட்சியங்கள் உள்ள மூன்றுபேரை கொலைசெய்த வழக்கில் நீதிமன்ற விசாரணையை எதிர்கொண்டு குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தாமலேயே அவரை சிறப்பு சிபிஐ நீதிமன்றம் விடுவித்தது. சொராபுதீன் ஷேக் போலி என்கவுண்டர் கொலை வழக்கில் அமித் ஷாவின் பங்கை பறைசாற்றும் மிக முக்கியமான தகவல்கள், ஆதாரங்கள் பலவற்றை நீதிமன்றம் கண்டு கொள்ளவில்லை. இவ்வழக்கின் புலனாய்வு அதிகாரியான வி எல் சோலங்கி அமித்ஷா எவ்வாறெல்லாம் புலனாய்வில் குறுக்கீடு செய்தார் என்று தெரிவித்த வாக்குமூலத்தை நீதிமன்றம் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. அதேபோல், மற்றொரு போலி என்கவுண்டரில் பலியான துளசி ப்ரஜாபதி என்பவர் மாஜிஸ்ட்ரேட் முன்பும் தேசிய மனித உரிமை ஆணையம் முன்பும் அளித்த மரண வாக்கு மூலத்தையும் தொலைபேசி அழைப்புக்கள் விவரங்களையும் இவ்வழக்கில் நீதிமன்றம் கணக்கில் கொள்ளவில்லை.

இவ்வனைத்திலிருந்தும் ஒன்று தெளிவாகிறது. அப்போது மத்தியில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சி 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு உள்ளிட்ட பல்வேறு இமாலய ஊழல்களால் அம்பலப்பட்டு ஆட்டம் கண்டிருந்ததால் பிஜேபி தலைமைக்கு தூது அனுப்பியது. குஜராத் இனப் படு கொலைகள், போலி என்கவுண்டர்கள் வழக்குகளிலிருந்து உங்களை விடுவித்து விடுகிறோம், பதிலுக்கு ஊழல் குற்றச்சாட்டுகளில் எங்களை மிகவும் சங்கடமான நிலைக்கு நீங்கள்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# நீதித்துறையையும் பிற புலனாய்வு அமைப்புக்களையும் ஆளும் முதலாளிவர்க்கம் அதன் கொடிய வர்க்க நலனுக்கு கீழ்படியச் செய்கிறது

3ம் பக்கத் தொடர்ச்சி

தள்ளாதீர்கள் என்று பேரம் பேசப்பட்டது. இந்த பேரத்தில் சட்டம் தனது போக்கில் செயல்படுவது பலியாக்கப்பட்டுவிட்டது.

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவரும் ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதல்வருமான சிபு சோரன் மீது 36 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த கொலை வழக்கு 'போதுமான ஆதாரங்கள்' இல்லை என்று மாவட்ட நீதிமன்றத்தில் கூறி முடிக்கப்பட்டது. இந்த கொலை வழக்கு உட்பட மேலும் 2 கொலை வழக்குகள் அவர் மீது சுமத்தப்பட்டிருந்தன. இவை அனைத்திலிருந்தும் சிபு சோரன் விடுவிக்கப்பட்டுவிட்டார். இவ்விவகாரத்தைப்பற்றி பத்திரிகை ஒன்று "எனவே, மொத்தத்தில் தெளிவான செய்தி தரப்பட்டுள்ளது. அதிகாரமும் பணமும் இருக்கின்றவரை நீங்கள் விரும்பியதையெல்லாம் செய்துகொள்ளுங்கள். சட்டம் தனக்கு வேண்டிய கால அவகாசத்தை எடுத்துக்கொண்டு இறுதியில் உங்களை விடுவித்துவிடும்" என்று கிண்டலடித்தது. (ட்ராவல் கைடு – 23 8 2007)

குடிபோதையில் கார் ஓட்டி நடைபாதையில் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது ஏற்றிக் கொன்ற வழக்கில் மும்பை செஷன்ஸ் நீதிமன்றம் ஒன்று பாலிவுட் நடிகர் சல்மான் கானுக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளித்த உடனேயே, அவருக்கு ஜாமீன் வழங்கி மும்பை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. தீர்ப்பின் நகல் அவருக்கு வழங்கப்படவில்லை என்ற உப்புச் சப்பற்ற காரணம்காட்டி இந்த ஜாமீன் வழங்கப் பட்டது. ஜாமீனை ரத்துசெய்ய உச்சநீதி மன்றம்கூட மறுத்துவிட்டது. அது மட்டுமின்றி, விருதுகள் வழங்கும் விழா ஒன்றில் கலந்து கொள்வதற்காக அவர் துபை செல்ல தற்கும் உயர்நீதிமன்றம் அனுமதியளித்தது. இந்த ஜாமீனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் பிரபலத்திற்கு அளிக்கப்படும் பாரபட்சமான சலுகை "சட்டத் தின் முன் அனைவரும் சமம்" என்ற பொது விதிக் கும் குந்தகம் விளைவிப்பதாக அமைகிறது. ஆகவே, சாதாரண மனிதன் இடைக்கால ஜாமீன் அல்லது சுதந்திரத்தை வழங்குவதற்கான மனுவோ மேல்முறையீடோ செய்வதை சட்டம் அனுமதிக் காதபோது, ஒரு பிரபலம் என்பதற்காக இச்சலுகை சல்மான் கானுக்கு கொடுக்கப் படக்கூடாது" என்று வாதிடப்பட்டது.

சாரதா நிதி நிறுவனம் உள்ளிட்ட ரோஸ் வேல்லி, எம் பி எஸ் போன்ற பல்வேறு மோசடி நிதி நிறுவனங்களிடமிருந்து மேற்கு வங்க ஆளுங்கட்சியான திரிணமூல் காங்கிரஸின் முன்னணி தலைவர்களும் மந்திரிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் பெருமளவில் நிதி பெற்றனர் என்பதை நாடு நன்கறியும். இதில் தொடர்புடைய சில திரிணமூல் தலைவர்கள் ஜெயிலில் உள்ளனர். மற்றும்சிலர் பெயிலில் வெளிவந்துள்ளனர். மேலும் சில திரிணமூல் தலைவர்கள்மீது குற்றஞ்சாட்டுவதற்கு போதுமான ஆதாரங்களை மத்திய புலனாய்வுத் துறை (சிபிஐ) திரட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாயின. இவற்றுக்கெல்லாம் எதிராக ஆரம்பத்தில் மம்தா பானர்ஜி கடும் ஆட்சேபம் தெரிவித்தார். அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடு மோடி அரசாங்கம் சிபிஐ யை தனது கட்சிக்கு எதிராக பயன்படுத்துவதாக மோடியை சாடினார். ஆனால், மேன்மேலும் அதிக அளவில் அசைக்கமுடியாத ஆதாரங்களை சிபிஐ வெளிக்கொணருவதைப் பார்த்த மம்தா பானர்ஜி தலைகீழாக மாறினார். மோடியோடு சுமுகமான உறவை ஏற்படுத்தினார். ராஜ்யசபாவில் தோற்றுப்போகக்கூடிய நிலையிலிருந்த சில மக்கள் விரோத மசோதாக்கள் தடையின்றி நிறைவேற்றப்படுவதற்கு உதவினார். இவ்வாறு நட்புக்கரம் நீட்டியபிறகு சிபிஐயின் புலனாய்வில் தொய்வு ஏற்பட்டுள்ளது. சாரதா சிட்ஃபண்ட் ஊழல் உள்ளிட்ட வழக்குகளில் மேற்கொண்டு விசாரணைகள் கிடப்பில் போடப்படும் என 'வதந்திகள்' நிலவுகின்றன.

### அதிகாரவர்க்கத்திற்கு பாரபட்சம் காட்டும் சட்டம்

சட்டத்தின்முன் அனைவரும் சமமாக பாவிக்கப்படவில்லை என்பதையே மேற்காணும் வழக்கு நிலவரங்கள் காட்டுகின்றன. ஆட்சியிலிருப்போர், ஆட்சியிலிருப்போரோடு நெருக்கமாக ஒட்டிஉறவாடுவோர், ஆட்சியிலிருப் போருக்கு நெருக்கமாகவும் சேவகம் புரிவோருமாக விளங்கும் அதிகாரிகள், பன்னூறு கோடி ரூபாய் சொத்துக்கள் கொண்ட தொழிலதிபர்கள், ஏகபோக முதலாளிகள் போன்றோர் விஷயத்தில் சட்டம் எப்போதுமே வளைந்துகொடுத்து நினைத்துப்பார்க்கவும் முடியாத அளவிற்கு சகாயம் காட்டியிருக்கிறது.

நீதித்துறையில் உள்ள வழக்கறிஞர்கள், நீதிபதிகள் பலர் தாங்கள் செய்த சத்தியப் பிரமாணத்திற்கு நம்பகமாகவும் தங்கள் தொழில் தர்மத்தை உயர்த்திப்பிடித்து வாதிட்டும் நீதி வழங்கியும் தங்கள் கடமையை செவ்வனே நிறைவேற்றியுள்ளனர். எத்தகைய சூழ்நிலையிலும் நீதித்தராசின் முள் சாயாமல் பார்த்துக்கொண்டு, தங்களது நடவடிக்கைகள் குறித்து சில குற்றச்சாட்டுகள்கூட எழாவண்ணம் தொழில் செய்துவந்துள்ளனர்.

சிலர் மேலிருந்து வரக்கூடிய நிர்ப்பந்தத் திற்கோ பண ஆசைக்கோ நீதியை கைவிட தயங்கமாட்டார். சமீபத்தில் நடந்த நிகழ்வு இதுபோன்ற ஒன்றைக் காட்டியது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த பி சதாசிவத்திற்கு பதவி ஓய்வுபெற்றபின் கேரள மாநில ஆளுநர் பதவி வழங்கப்பட்டது. இது பெரும் சர்ச்சையை கிளப்பியது. இவருக்கு முன்பு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த 39 நீதிபதிகளில் எவரும் இதுபோன்ற கவர்ச்சிகரமான அதிக அதிகாரமும் வருமானமும் செல்வாக்குமிக்க பதவியில் அதிலும் நீதித்துறையில் நிபுணத்துவம் தேவையற்ற பதவியில் அமர்த்தப்பட்டதில்லை. நீதிபதி சதாசிவத்திற்கு ஏன் இவ்வளவு சலுகை? மேலே கூறியபடி துளசிராம் ப்ரஜாபதி போலி என்கவுண்டர் வழக்கில் பிஜேபி கட்சித்தலைவர் அமித்ஷாவுக்கு எதிரான முதல் தகவல் அறிக்கையை ரத்துசெய்து ஏப்ரல் 2013ல் உத்தரவிட்டவர் நீதிபதி சதாசிவம் ஆவார்.

இதற்கு கைம்மாறாக, மன்னிக்கவும் கையூட்டாக பெற்றதுதான் கவர்னர் பதவி. எனவே, அவருடைய இந்த விசுவாசத்திற்காகத்தான் நீதிபதி சதாசிவம் வெகுமதி அளிக்கப்பட்டார் என ஊடகங்களிலும் அரசியல் வட்டாரத்திலும் பரவலாக பேசப்பட்டது. இத்தகைய போக்கு நிலைபெறுமானால், பின்பு நீதித்துறையினுடைய சுயசார்பும் பாரபட்சமற்ற தன்மையும் மேலும் மேலும் கேள்விக்குள்ளாக்கப்படும்; தனிப்பட்ட ஆதாயத்திற்காக அல்லது அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு சாதகமாக அளிக்கப்பட்டதோ என தீர்ப்புகள் மீது சந்தேகம் அதிகரிக்கும்.

### நீதித்துறையில் ஊழல்

நீதித்துறையிலும் ஊழல் ஊடுருவிவிட்டதாக உச்சநீதிமன்றமே ஒப்புக்கொண்டுள்ளது. 2010ம் ஆண்டில் பெரும் முறைகேடுகள் ஊழல் குற்றச்சாட்டுகள் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவந்து நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கையில் நீதித்துறையின் உயர்மட்டத்தில் அதிகரித்துவரும் ஊழல்மீது நாட்டின் கவனத்தை ஈர்த்த உச்சநீதிமன்றம் உயர்நீதிமன்றங்களில் சொந்த பந்தங்களுக்கு சலுகைகாட்டுதல், ஊழல் போன்றவை பெருமளவில் பரவியிருப்பதற்கு கவலை தெரிவித்தது.

### நீதித்துறை ஊழல் சிலவற்றின் பட்டியல்

"அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் சில நீதிபதிகள் தங்களது நீதிமன்றத்தில் தமது சொந்த பந்தங்களை வாதாட அனுமதிக்கின்றனர். இத்தகைய வழக்கறிஞர்கள் தொழில் துவங்கிய மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே கோடீசுவரர்கள் ஆகின்றனர். அவர்களது வங்கிக் கையிருப்பு ஏராளமாக உள்ளது. சொகுசுக் கார்களும் பெரும் பங்களாக்களுமாக மிகவும் ஆடம்பரமாக வாழத்துவங்குகின்றனர்" என்று உச்சநீதிமன்றம் வெளிப்படையாக ஒப்புக்கொண்டது. (ஆதாரம்; டைம்ஸ் ஆஃப் இந்தியா, 27 10 2010)

கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியான பி டி தினகரன் பல்பிடுங்கப்பட்ட பாம்பு என்றும் ஊழலை எதிர்ப்பதற்கான தைரியம் இல்லாதவர் என்றும் உயர்நீதிமன்ற நீதிபதியான சைலேந்திர குமார் குற்றஞ்சாட்டி தலைமை நீதிபதியாக பி டி தினகரன் நீடித்திருப்பதற்கான தகுதி குறித்து கேள்வி எழுப்பினார். (27 11 2010)

உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்குமுன்பு பஞ்சாப் – ஹரியானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்தபோது பெருமளவு நிதியை முறைகேடாக செலவிட்டதாக நீதிபதி வி ராமசாமி மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன. இக்குற்றச்சாட்டுகள் எழுந்தபோது அவர் உச்சநீதிமன்ற நீதிபதியாகி விட்டார். எனவே, அவர் மீதான குற்றச்சாட்டு களை விசாரிப்பதற்கு பாராளுமன்ற சபாநாயகர் விசாரணை கமிஷன் நியமித்தார். இக்குற்றச் சாட்டுகளில் உண்மை இருப்பது விசாரணையில் தெரியவந்தது. அப்படியிருந்தும், அவரை பதவிநீக்கம் செய்வதற்கு பாராளுமன்றம் தவறி விட்டது. அவரை பதவி நீக்கம் செய்வதற் கான தீர்மானம் பாராளுமன்றத்தில் ஓட்டெடுப்புக்கு வந்தபோது தனது உறுப்பினர்களைவாக்கெடுப்பில் கலந்து கொள்ளவேண்டாம் என்று அப்போது ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சி வாய்மொழி உத்தரவு பிறப்பித்தது. இவ்வாறு காங்கிரஸ் கட்சியின் தயவில் தனது பதவிக்காலம் முழுவதையும் முடித்துவிட்டு ஓய்வூதியமும் பெற்றார்.

கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதியான சௌமித்ராசென் நீதிமன்றத்தில் டெபாசிட் செய்யப்பட்ட தொகையை 'பெறுநர்' என்ற முறையில் பெற்று அதை தனது சொந்த பணத் தோடு கலந்து தனது சொந்த செலவுகளுக்கு உபயோகித்ததாக உள் விசாரணைக் கமிட்டியின் விசாரணையில் நிரூபணமானது.

கீழ்க்கோர்ட்டுகள், உயர்நீதிமன்றம், உச்சநீதி மன்றம் ஆகியவற்றை சேர்ந்த 34 நீதிபதிகள் ஈடுபட்ட காசியாபாத் வைப்புநிதி ஊழலில் 3 மற்றும் 4ம் நிலை ஊழியர்களின் வைப்புநிதி 23 கோடி ரூபாய் அளவிற்கு கையாடல் செய்யப்பட்டுள்ளது. (ஃப்ரண்ட்லைன் – 27 9 2008)

உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதிகள் எட்டுபேர் ஊழல் பேர்வழிகள் என்று குற்றஞ்சாட்டிய முன்னாள் சட்ட அமைச்சர் சாந்தி பூஷன் 'நீதிமன்ற அவமதிப்புக்காக என்னை சிறையில் தள்ளிப்பாருங்கள் என்று சவால் விடுத்தார். (டைம்ஸ் ஆஃப் இந்தியா – 27 10 2010)

4.12.2010 தேதியிட்ட ஃப்ரண்ட்லைன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் "நீதித்துறையில் ஊழல் அதிகரித்துவிட்டது. ஊழல் புரிவோரின் எண்ணிக்கை மட்டுமின்றி ஊழலின் அளவும்கூட அதிகரித்துவிட்டது" என்று நீதிபதி சந்தோஷ் ஹெக்டே தயக்கமின்றி பகிரங்கமாக தெரிவித்தார். உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி கே பாலகிருஷ்ணனுடைய உறவினர்கள்/ குடும்பத்தார் வருமானத்திற்கு அதிகமாக ஏராளமாக சொத்து குவித்த குற்றச்சாட்டு தொடர்பாக அப்போதைய பிரதமரான மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதவேண்டாம் என கேரள உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஒருவர் தன்னை வேண்டிக் கொண்டதாக நேர்மைக்கும் அறவொழுக் கத்திற்கும் பெயர்போன உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதியான மறைந்த நீதியரசர் வி ஆர் கிருஷ்ணய்யர் தெரிவித்தார். (தி ஹிந்து – 4 1 2011)

கொலைக் குற்றவாளி ஒருவரை விடுதலை செய்ததற்காக நாம்பள்ளி குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ட்ரேட்டை ஆந்திரப்பிரதேச உயர்நீதி மன்றம் பணிநீக்கம் செய்தது. மருத்துவ அதிகாரி ஒருவரிடமிருந்து பாலியல் சலுகைகளை கோரியதற்காக கயா மாவட்டத்திலுள்ள ஷேர்கட்டி துணைக்கோட்ட நீதியியல் நடுவர் நீதிபதி ஒருவர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார்.

பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம். ஆனால், ஊழலிலிருந்தும் முன்னபிப்பிராயங்களி லிருந்தும் நீதித்துறைகூட விடுபடவில்லை என்று நீதிபதிகளே திட்டவட்டமாக கருத்து தெரிவித் துள்ளனர் என்பதற்கு இவையே போதுமான சான்றுகளாகும். "சட்டமியற்றும் பிரிவினர், செயலாக்கத்துறைப் பிரிவினரைக் காட்டிலும் நீதித்துறையினர் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மிகவும் வெறுக்கத்தக்கவை யாகும்" என்று தில்லி உயர்நீதிமன்ற முன்னாள் முதன்மை நீதிபதி தலைமையிலான மூன்று நீதிபதிகள்கொண்ட

தொடர்ச்சி 5ம் பக்கம்

# மக்களின் விழிப்புணர்வு கொண்ட அரசியல் போராட்டத்தின் மூலம் மட்டுமே நீதித்துறை பிறழ்வதைத் தடுக்கமுடியும்

4ம் பக்கத் தொடர்ச்சி

பெஞ்ச் ஒருமுறை கருத்து தெரிவித்தது. (டி என் ஏ 12 01 2010). ஆனால் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், நீதித்துறையில் பெருமளவில் ஊழல் ஊடுருவியுள்ளது என அத்துறையைச் சேர்ந்தோரே பலமுறை கூறியபோதும் இம்முறைகேடுகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு அத்துறையின் பல படி நிலையில் உள்ள எவரும் தீர்மானகரமான கவனிக்கத்தக்க முயற்சிகள் எதையும் மேற் கொள்ளவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம்.

### கடப்பாடுமிக்க நீதித்துறை

அதிகரித்துவரும் ஊழல் மற்றும் சொந்த பந்தங்களுக்கு சலுகை காட்டுதலோடு கூடவே மற்றொரு கவலையும் நீண்ட நாட்களாக உள்ளது. அதிகாரத்திலிருப்போருக்கே முற்றிலும் கடப்பாடு கொண்டதாக நீதித்துறை ஆகிவருகிறது என்பதே அக்கவலை. கடப்பாடுமிக்க நீதித்துறை என்ற கருத்து ஜூன் 1975ம் ஆண்டில் உதித்தது. தேர்தல் முறைகேடுகள் புரிந்தாக குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி தேர்தலில் வெற்றிபெற்றது செல்லாது என 12 6 1975 அன்று அலகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆறு ஆண்டுகளுக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியை வகிக்கக்கூடாது என்றும் தடைவிதித்தது. இத்தீர்ப்பு அவருக்கு எதிரான மக்கள் கருத்தை திரட்டியது. அவசர நிலையை பிரகடனம் செய்து பதவியில் நீடித்த இந்திராகாந்தி, ஆணைகளின் மூலம் ஆட்சி நடத்துவதற்கு பிரதம மந்திரிக்கு வரம்பற்ற அதிகாரம் அளிக்கும் வகையில் அரசியல் சட்டத்தில் திருத்தங்களும் செய்தார். இத்திருத்தத்திற்கு எதிராக நீதித்துறையின் ஒரு பிரிவினர் வழக்கு தொடர்ந்தனர். அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைகளை எந்த சட்டத் திருத்தமும் மாற்றாது என அவர்கள் வாதிட்டனர். உச்சநீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் இத்தீர்மானம் மீது வாக்களித்தது. தீர்மானத்திற்கு ஆதரவாக 7 வாக்குகளும் எதிராக 6 வாக்குகளும் விழுந்தன. இவ்வாறு நூலிழையில் தீர்மானம் வெற்றி பெற்றது. தனக்கு ஆதரவாக வாக்களித்த 6 நீதிபதிகளில் மூத்தவரை, அவரைக்காட்டிலும் பணிமூப்பில் மேலேயிருந்த நீதிபதிகளை ஓரங்கட்டிவிட்டு, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இந்திராகாந்தி நியமித்தார். மரபை மீறி வழங்கப்பட்ட இந்த பதவிஉயர்வு கடப்பாடுமிக்க நீதித்துறை என்ற கருத்துக்கு வழிவகுத்தது. அவசரநிலை குறித்து 1976ம் ஆண்டு தான் வழங்கிய தீர்ப்பு நாட்டுமக்கள் ஏராளமானோரின் அடிப்படை உரிமைகளை மீறியதாகும் என்று உச்சநீதிமன்றம் சமீபத்தில் ஒப்புக்கொண்டுள்ளது (டைம்ஸ் ஆஃப் இந்தியா–3 1 2011). ஆனால் தற்போது மீண்டும் நீதித்துறையை தனது வாலாக ஒட்டிக்கொள்வதற்கு ஆளுங்கட்சி முயல்கிறது. “மோடிக்கு கடப்பாடு கொண்ட நீதித்துறையையே மோடி விரும்புகிறார். சட்ட விதிகளால் ஒழுங்கமைக்கப்படாத சர்வாதிகாரங் களையே அவர் விரும்புகிறார்” என்று உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞரான ராஜீவ் தாவன் குற்றஞ்சாட்டினார். (டைம்ஸ் ஆஃப் இந்தியா–8 4 2015)

ஜெயலலிதா வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட விதம், அமித் ஷாவுக்கு எதிரான வழக்குகள் திரும்பப்பெறப்படட விதம், சாரதா நிதி நிறுவன மோசடி வழக்கில் விசாரணையை துரிதப்படுத்து வதை முடக்கும் வகையில் சிபிஐக்கு கடிவாளம் இறுக்கப்பட்டவிதம் ஆகியவற்றைப் பார்க்கையில் ராஜீவ் தாவனின் குற்றச்சாட்டில் உண்மை இல்லாமல் இல்லை என்று தோன்றுகிறது. ஜெயலலிதா விடுவிக்கப்பட்டதும் உடனடியாக நரேந்திர மோடி அவருக்கு பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்ததைப் பார்க்கையில் கூட்டணியில் புதிய மாற்றங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ராஜ்யசபாவில் போதிய எண்ணிக் கையில் ஆதரவு இல்லாத கவலை தீரும் என்று மோடியும் அவரது கட்சி பிஜேபியும் நம்புகின்றன.

அருவருப்பான, குறுகிய அரசியல் நலன்களும் ஆளும் ஏகபோகங்களின் வஞ்சகத்திட்டத்திற்கு உகந்த வகையில் சட்டங்கள் இயற்றுவதற்கான அவசரத் தேவைகளுமே அதிகாரத்திலிருப்போர் விரும்பும் வகையில் தீர்ப்புகள் வழங்கப் படுவதற்கு காரணங்களாகின்றன. இத்தகைய தீர்ப்புகளுக்காக திரைமறைவில் காய்கள் நகர்த்தப்படுகின்றன. அதிகாரத்திலிருப்போருக்கும் செல்வந்தர்களுக்கும் சாதகமாகவே சட்டம் செயல்படுவதையும் தங்களது நலனை உயர்த்திப்பிடிப்பதில் சட்டம் சிறிதும் அக்கறைகாட்டாததையும் பலகாலமாக அனுபவித்துவரும் சாதாரணமக்கள், தாம் பெரிதும் விரும்பிய நடுநிலைத்தன்மை, பாரபட்சம் காட்டாமை போன்ற குணாம்சங்களை உதறிவிட்டு உரிய சட்ட நடைமுறைகளைக் கைவிடுவதற்கு என்ன காரணம் என்று வியந்துநிற்கின்றனர்.

### வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டதல்ல நீதித்துறை: ஆளும்வர்க்கத்தின் சேவகனே அது

ஆளும்வர்க்கத்தின் அடிமையே! ஆளும் முதலாளித்துவத்தின் இன்றைய அழுகிய காலக்கட்டத்தில் முதலாளித்துவ ஜனநாயகத்தின் அளவுகோலைக் கொண்டு நோக்கினால் இக்கேள்விக்கான விடை கிட்டாது. மார்க்சிசம்–லெனினிசம் என்ற சரியான அறிவியல்பூர்வ முறையியலின் அடிப்படையில் நிலவும் சமூக–அரசியல் அமைப்பை யதார்த்தமாக ஆய்வுசெய்யும்போதுதான் உண்மை தெரியவரும்.

முதலாளித்துவ ஜனநாயக அரசுகளின் மூன்று பிரதான தூண்களில் அல்லது உறுப்புகளில் சக்திவாய்ந்த உறுப்பு நீதித்துறையாகும். ஆளும் முதலாளித்துவ நலன்களைக்கருதி அம் முதலாளித்துவ அரசை இறுதியில் பாதுகாப்பதற் காக விதிக்கப்பட்டதே நீதித்துறை என்பது தெளிவு. அதன் வர்க்க குணாம்சத்தை மறைப்பதற்காகவே முதலாளித்துவ அரசின் மற்ற இரு தூண்களான சட்டமியற்றும் துறை இயற்றும் சட்டங்களும் அச்சட்டங்களை அமல்படுத்தும் செயலாக்கத் துறையின் நடவடிக்கைகளும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு செய்யப்படுகின்றனவா என்பதை கண்காணிக்கும் பொறுப்பு நீதித்துறையை சார்ந்தது என்று கூறப்படுகிறது.

ஒரு சமூக சக்தியாக முதலாளித்துவம் வளர்ந்துவந்த காலத்தில் பாரபட்சமின்றியும் நடுநிலையோடும் நீதித்துறை செயல்பட்டு நீதிபரிபாலனம் செய்யவேண்டும் என பாவனையேனும் செய்தது. ஆனால் தனது முற்போக்கு குணாம்சங்கள் அனைத்தையும் இழந்து முற்றிலும் பிற்போக்கானதாக, ஊழலும் கொடுங்கோன்மையும் மிக்கதாக முதலாளித்துவம் சீரழிந்துவிட்ட இன்று அதன் பாவனைவேடம் கலைந்து நீதித்துறையின் உண்மையான வர்க்க குணாம்சம் அம்பலப்படுகிறது. முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகள் அனைத்திலும் இன்று பொதுவான குணாம்சமாக பாசிசம் வந்துவிட்டது என்று இக்காலகட்டத்தின் தலைசிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களுள் ஒருவரும் எமது கட்சியின் ஸ்தாபகருமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள் நீண்ட காலத்திற்கு முன்பே நமக்கு காட்டினார். பாசிசத்தின் முக்கியமான குணாம்சங்களில் ஒன்று முதலாளித்துவ அரசின் கைகளில் அரசியல் அதிகாரம் அனைத்தையும் குவித்து, கடுமையாக போராடிப்பெற்ற ஜனநாயக உரிமைகளை மக்களிடமிருந்து பறிப்பதாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் தனது வஞ்சக வர்க்க நலனுக்கு அப்பட்டமாக சேவை செய்வதற்காகவும் இதற்கு எதிராக கிளம்பும் எந்த எதிர்ப்பையும் விரோதத்தையும் ஈவிரக்கமின்றி நசுக்கு வதற்காகவும் தனது சேவகர்களான அரசியல் கட்சித்தலைவர்கள், முக்கியமான அரசு அதிகாரிகள், தனக்கு கூஜா தூக்குவோர் ஆகியோர் வரம்பற்ற அதிகாரத்தை தம்மிடம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆளும் முதலாளித்துவ வர்க்கம் விரும்புகிறது. விதிகளை வளைத்தும் நியதிகளையும் மரபுகளையும் வழக்கங்களையும் மீறியும் தாங்கள் விரும்பும் எதை வேண்டுமானாலும் செய்வதற்கு நீதித்துறையின் சுதந்திரம் தடையாக இருக்கும். எனவே, தனக்கு பணிந்து செல்லக்கூடிய, ஒத்துப்போகக்கூடிய நீதித்துறைதான் ஆளும் முதலாளிவர்க்கத்திற்கு தேவை. அதாவது ஆளும்வர்க்கத்திற்கு கடமைப்பட்ட நீதித்துறையே அதற்கு வேண்டும்.

முடமாகி, அழுகி, மரணத்தருவாயில் உள்ள முதலாளித்துவம் தருவதற்கு நல்லது எதையும் தன்னிடம் கொண்டிருக்கவில்லை. அது கொடுக்கக் கூடியதெல்லாம் அழுகலும் அழுக்கும்தான். இந்த அழுகல் முதலாளித் துவத்தை பாதுகாப்பதற்கு அதோடு துணை போகும் எவரும் ஊழல், ஒழுங்கீனம் போன்ற துர்குணாம்சங்களுக்கு பலியாகியே தீருவர். இந்த சமூக அமைப்புமுறையை பாதுகாப்பதற்காக வேலைசெய்யும் அரசியல் பெரும்புள்ளிகள், உயர் அரசு அதிகாரிகள் அனைவரும் ஊழல் உள்ளிட்ட பல்வேறு பொருளாதார குற்றங்கள் என்ற படுகுழியில் விழுந்தே தீரவேண்டும். இந்த சமூக அமைப்புமுறைதான் இந்த ஊழல்வாதிகள், சீரழிந்த, அறநெறியற்றோரை உருவாக்குகிறது: அவர்களை பாதுகாக்கிறது. அவர்களின் தயவால் உயிர் வாழ்கிறது. மட்கிவரும் இவ்வமைப்பு முறையின் ஒரு உறுப்பாக இருப்பதால் நீதித்துறையும் இந்த சீரழிவிலிருந்து தற்காத்துக் கொள்ளவோ தப்பிக்கவோ முடியாது. அமைப்புமுறையின் வரம்புகளை மீறிப்போக முடியாது. வர்க்கங்களாக பிளவுற்றுள்ள ஒரு சமுதாயத்தில் வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டதாக நீதித்துறை இருக்கமுடியாது. சமுதாயம் எவ்வளவுதான் அழுகிப்போன சமுதாயமாக இருப்பினும் இறுதியில் அதனை பாதுகாக்கும் வேலையை நீதித்துறை செய்தேயாகவேண்டும். எனவே, நீதிமன்றங்களின் தீர்ப்புகளும் ஆணைகளும் சமூக அமைப்புமுறைக்கும் அவ்வமைப்பு முறைக்காக சேவைசெய்யும் முக்கியமான புள்ளிகளுக்கும் எதிராக இருக்க முடியாது. இன்னும் தெளிவாக சொல்ல வேண்டுமானால் வர்க்கப் பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டதாக நீதித்துறை இருக்கமுடியாது. அதேபோல் இதற்கு மாறாக, காசுபணம் இல்லாத ஒடுக்கப்பட்ட நாட்டு மக்களுக்கு, உயர் மட்டத்தில் உள்ளோரோடு ‘தொடர்பு இல்லாத’ ‘பொது ஜனங்களுக்கு’ நீதி மறுக்கப்படுகிறது. ஏழை மனிதனுக்கு கிடைப்ப தெல்லாம் பொய் வழக்குகளில் மாட்டிவிடுதல், பல வகைகளில் துன்புறுத்தி கொடுமைபடுத்துதல், அலைக்கழிக்கப்படுதல், தேவையின்றி வழக்குகளை இழுத்தடித்தல், நீதிமன்றக் கட்டண உயர்வால் நியாயமான வழக்குகளை தொடுக்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டு அதன்மூலம் நீதிபெறும் வாய்ப்புகளே மறுக்கப்படுதல் போன்றவைகளே ஆகும். உதாரணத்திற்கு, போதை தலைக்கேறிய சல்மான்கான் காரை ஏற்றிக் கொன்ற நடைபாதைவாசிகளுக்கு நீதி கடைக்கவில்லை. ஆனால், ‘பெரிய இடங்களில்’ தனக்கிருந்த தொடர்புகளாலும் செல்வாக்காலும் சல்மான் கானால் தப்பிக்கமுடிகிறது. இதுவே இந்திய நீதித்துறையின் இன்றைய லட்சணம். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒருசில குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதால் இந்த உண்மையை மறைக்கமுடியாது. அதிக திடமான மனம், அறநெறிகள் – ஒழுக்கங்களில் அசைக்கமுடியாத உறுதி, மிரட்டல்களுக்கு அடிபணிய மறுப்பதற்கான துணிவு, அதிகாரத்திலிருப் போரிடமிருந்து வரும் ஆபத்துக்களை எதிர் கொள்ளும் நெஞ்சுரம் போன்றவை இருந்தாலன்றி நீதிபதிகள்கூட ஊழல் சேற்றில் புதைந்து போவதிலிருந்து தப்பிக்கமுடியாது என்பதைத்தான் சமீபத்திய சம்பவங்கள் பலவும் பறைசாற்று கின்றன.

### மக்கள் உண்மையை உணரவேண்டும்

வாக்குவங்கி அரசியலும் பிரதான முதலாளித்துவ கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் ஊழலில் திளைத்து முற்றிலும் சீரழிந்துவிட்டனர் என்பதை தங்களது சொந்த அனுபவங்களிலிருந்தும் ஊடகங்களில் வெளியாகும் செய்திகளிலிருந்தும் சாதாரண மக்கள் நன்றாக தெரிந்து கொண்டுள்ளனர் இது அவர்கள் வாழ்வை மிகக்கொடூரமாக பாதிக்கிறது. ஆகையால்தான், இந்த குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால், யதார்த்த சூழ்நிலைபற்றிய அறியாமையாலும் சட்டத்தின் ஆட்சிபற்றி முதலாளித்துவம் செய்யும் பிரச்சாரத்திற்குப் பலியாவதாலும் இவர்களில் பெரும்பாலோர் நீதித்துறையின் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். தங்களுக்கு ஆறுதலும் நிவாரணமும் கிடைக்கும் ஒரே இடம் நீதிமன்றமே என்று நினைக்கிறார்கள். ஆனால், ஜெயலலிதா, அமித் ஷா, லாலு பிரசாத், முலாயம்சிங், மாயாவதி, நரேந்திர மோடி போன்றோர் விநோதமான, சந்தேகத்திற்கிடமான முறையில்

தொடர்ச்சி 8ம் பக்கம்

# சென்னை ஆர் கே நகர் தொகுதி இடைத்தேர்தல் – இடதுசாரி கட்சிகளின் ஆதரவுபெற்ற சிபிஐ கட்சி வேட்பாளரை ஆதரித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பிரச்சாரம்

மத்திய அரசாங்கத்தில் ஆட்சிக்கு வந்தது முதல் பிஜேபி அரசாங்கம் முதலாளித்துவ ஆதரவு மக்கள் விரோத புதிய பொருளாதாரக் கொள்கைகளான தாராளமயம் தனியார்மயம் உலகமயம் ஆகியவற்றை தீவிரமாக அமுலாக்கி வருவதுடன் இந்துத்துவா மதவெறி தாக்குதல்களையும் தொடுத்துவருகின்றது. இதனை எதிர்த்து நாடு தழுவிய அளவில் ஒன்றுபட்ட மக்கள் போராட்ட இயக்கங்களை நடத்த ஆறு இடதுசாரி கட்சிகளான சிபிஐ(எம்), சிபிஐ, சிபிஐ–எம்.எல் (லிபரேசன்), ஆர்எஸ்பி, அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் மற்றும் எமது கட்சியான எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) முடிவெடுத்துள்ளன. பிஜேபி யின் பொருளாதார கொள்கைகளை எதிர்த்தும் ஃபாசிச நடவடிக்கைகளை எதிர்த்தும் கண்டன வாரம், ஏகாதிபத்திய அமெரிக்காவின் அதிபர் ஒபாமாவின் வரவிற்கு எதிர்ப்பு போன்ற பல போராட்டங்களை இணைந்து நடத்தின.

சொத்துக் குவிப்பு வழக்கில் விடுவிக்கப் பட்வுடன் சென்னை ஆர்கே நகர் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதில் ஆளும் அதிமுக வின் வேட்ப்பாளாரான செல்வி ஜெயலலிதாவை எதிர்த்து இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவுபெற்ற சிபிஐ கட்சியின் வேட்பாளர் தோழர் மகேந்திரன் களமிறங்கினார். தேர்தலையும் மக்கள் போராட்டதின் ஒரு பகுதி என்பது எமது கட்சியின் நிலைப்பாடாகும். அதன் அடிப்படையில், சிபிஐ கட்சியின் வேட்பாளரை ஆதரித்து தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டி அறிக்கை விட்டது. இதனைத் தொடர்ந்து எமது கட்சித் தோழர்களும் ஆதரவாளர்களும் சிபிஐ கட்சியை ஆதரித்து பிரச்சாரத்தில் இறங்கினர். சிபிஐ(எம்) மற்றும் சிபிஐ–எம்.எல் கட்சிகளும் தோழர் மகேந்திரனை ஆதரித்து பிரச்சாரம் செய்தனர். தொகுதியின் அனைத்து இடங்களிலும் கூட்டாக அனைத்துக் கட்சி தோழர்களும் வேட்பாளருடன் இணைந்து ஊர்வலமாக வாக்குகளைச் சேகரித்தனர். மக்கள் கோரிக்கை களையும் ஒன்றுபட்ட இடதுசாரி இயக்கத்தின் ஒற்றுமையையும் வலியிறுத்தி கோஷங்கள் எழுப்பிய வண்ணம் பல பகுதிகளில் மக்களை சந்தித்தனர்.

இன்றுவரை வடசென்னை மக்களின் குறிப்பாக நீண்டகாலமாக அதிமுகவின் தொகுதியாக இருக்கும் ஆர் கே நகர் தொகுதி மக்களின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளான சுத்தமான குடிநீர், சுகாதாரம், பராமரிப்பு, கல்விக்கூடங்கள் என்று எதுவும் பூர்த்தி செய்யப்படவில்லை. மேலும் கொருக்குப் பேட்டை இரயில்வே மேம்பாலம் 8 ஆண்டுகளாக கட்டிமுடிக்கப்படாமலே உள்ளது. நூறு மீட்டருக்கு ஒன்றோ அல்லது ஒவ்வொரு தெருமுனை களிலுமோ அரசின் டாஸ்மாக் கடைகள் உள்ளன கொடுங்கையூர் பகுதியில் கொட்டப்படும் குப்பைகளை உரிய முறையில் அழிக்கவும் அகற்றவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படு வதில்லை. இதனால் மக்கள் பல நோய்களுக்கு உள்ளாகின்றனர். இது போன்ற மக்கள் கோரிக்கைகள் பிரச்சாரத்தில் வலியுறுத்தப் பட்டன.

தோழர் மகேந்திரனை ஆதரித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் சார்பில் பல ஆயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரங்களும் வினியோகிக்கப்பட்டன. கூட்டு இயக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தியும் அதிமுக வேட்பாளரை மக்கள் எதிர்க்கவேண்டிய அவசியத்தை விளக்கியும் எழுதப்பட்ட இப் பிரசுரம் மக்களிடையே வரவேற்பைப் பெற்றது.






இடதுசாரி கட்சிகளின் ஆதரவுபெற்ற சிபிஐ கட்சி வேட்பாளரை ஆதரித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) யின் தொண்டர்கள் பிரச்சாரத்தில்

# மின்வாரிய அனைத்துப் பணியாளர் பொறியாளர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம் மற்றும் மின்சாரச்சட்டம் 2014க்கு எதிராக கருத்தரங்கம்

மத்திய தொழிற்சங்கமான ஏஐயுடியுசி இணைக்கப்பட்ட **மின்வாரிய அனைத்துப் பணியாளர் பொறியாளர் சங்கத்தின்**-(MAPPS- மேப்ஸ்) ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டம் ஜூன் 21 தேதி விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் நடைபெற்றது.

பொதுக்குழுக் கூட்டத்தின் முதல் அமர்வில் மின்சாரச் சட்டம் 2003 மற்றும் மத்திய, மாநில அரசாங்கங்கள் தொழிலாளர்கள் மீது தொடுத்து வரும் தாக்குதல்கள் குறித்து விவாதங்கள் நடந்தன. மேப்ஸின் தலைவர் சண்முகம் தலைமை தாங்கினார். ஏஐயுடியுசியின் தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் தலைவர் அனவரதன், துணைத் தலைவர் எஸ் கணேசன் ஆகியோர் இப் பொதுக்குழு கூட்டத்தில் உரையாற்றினர்.

ஏஐயுடியுசியுடன் இணைக்கப்பட்ட அகில இந்திய பவர்மென் ஃபெடரேஷனின்(AIPF) பொதுச் செயலாளர் தோழர் சமர்சின்ஹா கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தமது உரையில் மத்திய, மாநில அரசாங்கங்களின் தனியார்மய நடவடிக்கைகள் மற்றும் மின்வாரிய பணியாளர்கள் மீதான தாக்குதல்கள் ஆகியவை குறித்து விளக்கினார். தொடர்ச்சியான, வலிமையான இயக்கங்கள் கட்டப்பட வேண்டியதன் முக்கியத் துவம் குறித்தும் நாடு முழுவதிலும் மின்துறையில் செயல்பட்டுவருகின்ற அனைத்து சங்கங்களும் ஒன்றுபட்டுக் களமிறங்க வேண்டியதன் அவசியம் குறித்தும் சுட்டிக் காட்டினார். மேப்ஸின் பொதுச் செயலாளர் தோழர் ஊரணிராஜ் பாண்டி சங்கத்தின் ஆண்டறிக்கையை சமர்பித்தார். சங்கத்தின் பொருளாளர் தோழர் செல்வராஜ் துணைத் தலைவர் ஜவஹர் ஆகியோர் பணியிடப் பாதுகாப்பு குறித்து உரையாற்றினர். திண்டிவனம் பகுதியின் தலைவர் சந்தானம், துணைத்தலைவர் சங்கர் ஆகியோர் பொதுக்குழு கூட்ட விவாதங் களில் பங்கெடுத்துக் கொண்டனர். தோழர் சங்கர் நன்றியுரை வழங்கினார். விழுப்புரம், கடலூர், மதுரை மற்றும் தேனி மாவட்டங்களிலிருந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். தோழர் சமர்சின்ஹா அவர்களின் சிறப்புரை அனை வருக்கும் உத்வேகமளிப்பதாய் அமைந்திருந்தது. மேப்ஸின் தலைவர்கள் ஆல் இன்டியா பவர்மென் ஃபெடரேஷனுடனான தங்களின் உறவை மேன்மேலும் வலுப்படுத்த உறுதியளித்தனர்.




அகில இந்திய பவர்மென் ஃபெடரேஷன் பொதுச் செயலாளர் சமர்சின்ஹா உரையாற்றுகிறார்

# ரயில்வே துறையை தனியார்மயமாக்கும் முடிவை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கடுமையாக எதிர்க்கிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஜூன் 15, 2015 அன்று விடுத்த அறிக்கை:*

பிரதமர் மோடிக்கு மிகவும் நெருக்கமானவர், வேண்டியவர் என்றறியப்பட்ட பூர்ஷ்வா பொருளாதாரவாதியான திரு பிபேக் தேப்ராய் தலைமையிலான கமிட்டி ஆளும் முதலாளி வர்க்கத்தின் விருப்பத்திற்கிணங்க இந்திய ரயில்வேயை தனியார்மயமாக்க உடனடியாக, வேகமான நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்துள்ளதானது கடும் சீற்றம் கொள்ளக் கூடியதாகும்.

மறைமுகமாக பிபிபி (PPP) வழியிலும் மிகப்பெரிய அளவிலான அவுட்சோர்சிங் மற்றும் அதுபோன்ற வழியிலும் இதுவரை இந்திய ரயில்வேயை படிப்படியாகத் தனியார்மயமாக்கியது மக்கள் கண்களுக்குத் தெரியாமலிருந்தது. ஆனால் இத் திரையெல்லாம் தற்போது விலக்கப்பட்டு, இந்நோக்கத்திற்காகவே அமைக்கப்பட்ட ஒரு கமிட்டியின்மூலம் விரும்பிய பரிந்துரைகளைப் பெற்று ரயில்வேயின் பணிகளை தனியார் முதலாளிகளுக்கு ஒப்படைக்கும் பிஜேபி அரசாங்கத்தின் கொடிய நோக்கம் நிறைவேற்றப் பட்டுவருகிறது. உலகின் மிகப்பெரிய நிறுவனங் களில் ஒன்றும் மக்கள் பணத்திலிருந்து உருவாக்கப்பட்ட ஒரு தேசிய சொத்தாகவும் இருக்கக்கூடிய இந்திய ரயில்வேயானது மக்களின் வியர்வையிலும் ரத்தத்திலும் உருவானதாகும். அப்படிப்பட்ட முக்கியமான இந்த தேசிய சொத்தை அப்பட்டமாக தனியார் முதலாளி களுக்கு தானம் செய்வது அனுமதிக்க முடியாததும் ஏற்றுக்கொள்ள முடியாததுமாகும்.

நாடுதழுவிய சக்திவாய்ந்த போராட்டத்தை வளர்த்தெடுப்பதன்மூலம் இந்த கொடிய நோக்கத்தை முறியடிக்க வேண்டியது அவசரமான அவசியமானத் தேவையாகும். நாட்டு மக்கள் இந்திய ரயில்வேயை தனியார்மயமாக்குவதை தடுத்துநிறுத்த முன்வந்து, உகந்த போராட்டத்தை கட்டியெழுப்புமாறு வேண்டுகிறோம். ஒரு போர்குணமிக்க பாட்டாளிவர்க்க இயக்கத்தை கட்டவிழ்த்து விடுமாறும் போராட்டத்தின் அழுத்தத்தின்மூலம் முழுக்கமுழுக்க இம் மக்கள் விரோத முடிவை திரும்பப்பெற அரசாங்கத்தின் மீது நிர்ப்பந்தம் தருமாறும் அனைத்து தொழிற் சங்கங்களுக்கும் நாங்கள் உணர்வுபூர்வமான வேண்டுகோள் விடுக்கிறோம்.

**செப்டம்பர் 2 – மத்தியத் தொழிற் சங்கங்கள் அழைப்புவிடுத்திருக்கும் அகில இந்திய வேலை நிறுத்தத்தை வெற்றிபெறச் செய்வோம்!**

# அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் நடத்திய தென்னிந்திய மாநிலங்களின் ஐடிஐ பயிற்சி மாணவர் மாநாடு

நாட்டின் அரசு மற்றும் தனியார் துறைகளுக்கு பயிற்சி பெற்ற தொழிலாளர்களை வழங்க அறுபது ஆண்டுகளுக்கு முன்பு ஐடிஐ தொழிற் பயிற்சிக் கூடங்கள் நிறுவப்பட்டன. நடைமுறையில் தொழிற்சாலைகளுக்கு தேர்ச்சி பெற்ற ஸ்கில்டு தொழிலாளர்களை உருவாக்குவதற்காக செய்முறைப் பாடங்கள் அதிகமாகக் கொண்ட ஐடிஐ பாடத்திட்டம் வகுக்கப்பட்டது. இந்த நோக்கத்தை முறியடிக்கும் வகையில் மிகச் சமீபத்தில் **2013** ஆம் ஆண்டு 'செமஸ்டர் பாடத்திட்டம்' புகுத்தப்பட்டு, செய்முறை வகுப்புகளுக்குப் பதிலாக தியரி வகுப்புகள் அதிகரிக்கப் பட்டு புத்தகப் பாடச் சுமையும் தேர்வுச் சுமையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கம் இந்த நடவடிக்கையை சம்பந்தப்பட்ட மாணவர்களுடனோ, ஆசிரியர்களுடனோ நிர்வாகத்தினருடனோ கலந்து ஆலோசிக்காமல் தன்னிச்சையாக எடுத்துள்ளது. மேலும், இந்தப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்த எந்தத் தயாரிப்புகளும் செய்ய கால அவகாசம் ஐடிஐ களுக்கு கொடுக்கப் படவில்லை. விளைவு, ஆசிரியர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்ள இயலாததும் ஏராளமான மாணவர்கள் ஃபெயிலாகியதும் ஒட்டு மொத்த குழப்பமும் ஆகும். இதை எதிர்த்து எமது இளைஞர் சங்கமான அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் (ஏஐடிஒய்ஓ) முதலில் கர்நாடகா மாநிலத்தில் இயக்கத்தைத் துவக்கியது. படிப்படியாக போராட்டம் வளர்ந்து வலுப்பெற்று மாநிலம் முழுவதும் பரவியதுடன் அண்டை மாநிலங்களிலும் மாணவர்களிடம் வரவேற்பைப் பெற்றது.

ஐடிஐ மாணவர்களின் மற்றுமொரு சோகம், பல்வேறு மாநிலங்களில் **60** ஆண்டுகளாக அவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை வெறும் ரூ**50** மட்டுமே! இதுவும் முறையாக பல பயிற்சி நிறுவனங்களில் வழங்கப்படுவதில்லை. அரசு ஐடிஐ க்கள் புதிதாகக் கட்டாததால் தனியார் ஐடிஐ களில் பணத்தைக் கொடுத்து சேர வேண்டிய நிலை. ஐடிஐ க்களில் மதிய உணவுக் கான கூடமோ ஏற்பாடோ பல இடங்களில் கிடையாது. மாபெரும் தொழிற்சாலைகள் உட்கட்டமைப்பு தொழில்கள் என இந்திய நாட்டை நிர்மாணிக்கும் அதி முக்கிய பணிகளில் ஈடுபடுகின்ற இளைஞர்களை உருவாக்கும் ஐடிஐ க்களின் நிலைமை இதுதானாகும். எனவே ஏஐடிஒய்ஓ கீழ் கண்ட கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை நாடுமுழுவதும் நடத்தத் திட்டமிடப்பட்டது.

- செமஸ்டர் முறையை ரத்து செய்.
- மாத உதவித்தொகையை ரூ**50** லிருந்து ரூ**1500** ஆக உயர்த்து.
- அனைத்து ஐடிஐ பயிற்சி பெற்றோருக்கும் வேலை மற்றும் அப்பிரன்டிஸ்சிபை உறுதிசெய்.
- ஐடிஐ பாடத் தேர்வுகளில் நெகடிவ் மார்க் போடும் திட்டத்தை கைவிடு.
- அனைத்து மாணவர்களுக்கும் காலை, மதிய உணவுகள் வழங்கு.
- மாவட்ட, வட்டார தலைநகரங்களில் மாணவர்களுக்கு விடுதிகளை அமைத்துக் கொடு.
- அடிப்படை மருத்துவ வசதியையும் குறைந்த பட்ச கட்டமைப்புகளையும் ஐடிஐ களில் உருவாக்கு.
- அனைத்து ஐடிஐ களிலும் ஆசிரியர்களையும் பிற பணியார்களையும் காலி இடங்களில் உடனே நிரப்பு.
- தேசிய தொழிற் பாடத்திட்டத்திற்கும் மாநிலப் பாடத்திட்டத்திற்கும் உள்ள ஏற்றத்தாழ்வை சரிசெய்.
- ஐடிஐ களில் மாலையில் செயல் படக்கூடிய பாலிடெக்னிக் கல்லூரிகளை மாவட்ட அளவிலாவது அமைத்துக் கொடு.



ஜுன் **12 2015** அன்று ஹைதராபாத்தில் நடைபெற்ற ஐடிஐ பயிற்சி மாணவர் மாநாட்டில் ஏஐடிஒய்ஓ வின் அகில இந்தியத் தலைவர் தோழர் பி ஆர் மஞ்சுநாத் உரையாற்றுகிறார், மாநாட்டில் கலந்து கொண்ட ஐடிஐ மாணவர்கள்

ஏஐடிஒய்ஓ வின் போராட்டக் குழு மத்திய அமைச்சரை இம்மாநாட்டிற்கு முன்பே ஒருமுறை சந்தித்து கோரிக்கை மனுவை கொடுத்திருந்தது. ஆனால் அவற்றை மத்திய அரசாங்கம் கவனிக்க வில்லை. எனவே மேற்கூறிய கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு கர்நாடகா கேரளா ஆந்திரா தெலுங்கானா ஆகிய ஐந்து மாநிலங் களிலிருந்து ஆயிரக்கணக்கான ஐடிஐ பயிலும் பயிற்சி மாணவர்கள் இவ்வருடம் ஜுன் **12** ஆம் தேதியன்று 'தென்னிந்திய மாநிலங்களின் ஐடிஐ பயிற்சி மாணவர் மாநாட்டில்' பங்கேற்க ஹைதராபாத்தில் குவிந்தனர். அதிகாலையிலேயே இம்மாநிலங்களின் பல வெகுதூர மாவட்டங் களிலிருந்து இளம் பயிற்சி மாணவர்கள் தங்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக ஒருமித்த குரலை எழுப்ப மொழி, சாதி, இன வேறுபாடுகள் இன்றி ஒன்றாகக் கூடி ஊர்வலமாகச் சென்ற காட்சி, மக்களிடையே ஜனநாயக இயக்கத்தில் மீண்டும் நம்பிக்கை உணர்வை எழுப்பியதில் வியப்பில்லை.

அன்று அதிகாலையிலேயே ஹைதராபாத்தில் நாம்பள்ளியில் இருக்கும் பொருட்காட்சி மைதானத்தில் வந்து குவிந்த மாணவர்கள் **10**மணிக்கு பிரகாசம் அரங்கை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். புகழ்பெற்ற பத்திரிகையாளரும், அரசியல் ஆய்வாளாரும் உஸ்மானியா பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியருமான டாக்டர் பி எல் விஷ்வேஸ்வரராவ் மாநாட்டைத் துவக்கிவைத்து உரையாற்றினார். நடைமுறை சார்ந்த பயிற்சிக் கல்வியான ஐடிஐ யில் அறிவியலுக்கு விரோதமான செமெஸ்டர் பாடத்திட்டம் புகுத்தப்பட்டதைக் கைவிடவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

சிறப்புரையாற்றிய ஏஐடிஒய்ஓ வின் அகில இந்தியத் தலைவர் தோழர் பி ஆர் மஞ்சுநாத் பேசுகையில், நாட்டின் பிரதமர் மோடி அதானிக்கும் அம்பானிக்கும் மட்டுமே உழைக்கின்றார் மக்கள் பிரச்சினைகளை உதாசீனப் படுத்துகின்றார் என குறிப்பிட்டார். எனவே சக்திவாய்ந்த இளைஞர் இயக்கத்தின் இன்றைய தேவையை வலியுறுத்தினார். பல ஆண்டு காலமாக கேட்பாரற்று, அடிப்படை வசதிகளும் தேவைகளும் புறக்கணிக் கப்பட்டு கிடக்கும் ஐடிஐ மாணவர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வுகான இளைஞர் சங்கம் நாடுமுழுவதும் போராட்டங்களை நடத்தி வருவதாக ஏஐடிஒய்ஓ வின் பொதுச் செயலாளர் தோழர் பிரதிபா நாயக் தனது உரையில் குறிப்பிட்டார். தமிழ்நாட்டிலிருந்து பிரதிநிதிகள் இம் மாநாட்டில் பங்குகொண்டனர். கூட்டத்தில் தோழர்கள் ராஜகோபால் (தமிழ்நாடு), பிரசாந்த் (கேரளா), பரத் (ஆந்திரா–தெலுங்கானா), ராமான்ஜனப்பா (கர்நாடகா) ஆகியோரும் உரையாற்றினர்.

சமீபத்திய தகவலின் படி, **6** மதமொருமுறை என இருந்த செமஸ்டர் அமைப்புமுறை தற்போது கைவிடப்பட்டு, ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே தேர்வுகள் வைக்கப்படுமாம். அப்படி என்றால் இதனை இப் போராட்டத்தின் வெற்றி என்று நிச்சயமாகக் கூறலாம். இனி, பிற கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் வரை மாணவர் போராட்டம் தொடரும்.

# ஊழல்பேர்வழி லலித் மோடிக்கு ஒரு பயண ஆவணத்தை ஏற்பாடு செய்துகொடுத்த சுஷ்மா ஸ்வராஜின் சட்டவிரோத, நீதிநெறியற்ற நடவடிக்கையை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கடுமையாக கண்டிக்கிறது; மத்திய அமைச்சர் பதவியை அவர் உடனடியாக ராஜினாமா செய்யக்கோருகிறது

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் அவர்கள் ஜுன் **16, 2015** அன்று வெளியிட்ட அறிக்கை:*

ஐபிஎல் முன்னாள் சேர்மனும் பணத்தை கொள்ளையடித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட ஊழல்வாதியும் மத்திய புலனாய்வு ஏஜென்ஸியான அமலாக்க இயக்குநகரத்திலிருந்து தப்பி ஓடிவிட்டவருமான லலித் மோடிக்கு சாதகமாக பயண ஆவணத்தை ஏற்பாடு செய்துகொடுத்ததில் பிரிட்டன் (யுகே) அரசாங்கத்துடன் மத்தியஸ்தம் செய்ய தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தும் மிகுந்த சட்டவிரோதமாகவும் நடந்துகொண்ட வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி சுஷ்மா ஸ்வராஜின் மிகுந்த இழிவான நடவடிக்கையை நாங்கள் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். பரிசுத்த ஊழலற்ற சமுதாயத்தை வழங்குவதாக ஆர்எஸ்எஸ் – பிஜேபி கூட்டணியின் தம்பட்டம் எவ்வளவு வெற்று கூச்சலும் ஏமாற்றும் கொண்டதென்பது மீண்டுமொருமுறை அம்பலமாகியுள்ளது.

சுஷ்மா ஸ்வராஜைப் போன்ற பூர்ஷ்வா ஆட்சியாளர்கள் ஒரு நாட்டில் அரசாங்கத்தை நடத்துவதில் மிகுந்த உன்னதமான நீதிநெறி – தார்மீக கோட்பாடுகளை தங்கள் இஷ்டத்திற்கு காலிலிட்டு மிதிக்கிறார்கள் என்பதையும் இது வெளிப்படுத்தியிருக்கிறது. அமைச்சரவை யிலிருந்து சுஷ்மா ஸ்வராஜ் உடனடியாக விலக வேண்டுமெனவும் இவ் விஷயத்தில் விசாரணை மேற்கொள்ளவும் உரிய முறையில் உண்மையை வெளிக்கொணர ஒரு உயர்மட்ட நீதிவிசாரணை கமிட்டியை மத்திய அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமெனவும் நாங்கள் கோருகிறோம்.

## "உலக போதைப்பொருள் எதிர்ப்பு நாள்"

அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கத்தினர் தேனியில் பிரச்சாரம்

அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கத்தின் சார்பாக ஜுன் **26, 2015** அன்று தேனியில் "உலக போதைப்பொருள் எதிர்ப்பு நாள்" அனுஷ்டிக்கப்பட்டது. மது போதைப் பொருட்களை வேரோடு ஒழிக்க வேண்டும், மக்களின் வாழ்வை பாதுகாக்க வேண்டும், மத்திய, மாநில அரசாங்கம் மக்களின் வாழ்க்கைக்கு உத்திரவாதம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை ஏந்திய படி வாயில் கறுப்புத்துணி கட்டி மௌன எதிர்ப்பை தெரிவித்தனர். துண்டு பிரசுரங்களை வழங்கினர். இதையொட்டி மாவட்டத்திலுள்ள பள்ளி, கல்லூரிகளில் விழிப்புணர்வு விவாதங்களை நடத்தினர்.



Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 27th July 2015

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# பீடுநடைபோட்டு முன்னோக்கி உயர்ந்துவரும் ஏஐடிஓய்ஓ-வின் 50 ஆண்டு



கல்கத்தா



சென்னை



திண்டுக்கல் மாவட்டம் – வத்தலகுண்டு

*ஏஐடிஓய்ஓ வின் 50பதாவது ஸ்தாபக தினத்தில் நடைபெற்ற கொடியேற்றுதல், மேற்கோள் கண்காட்சி, விவாதக் கூட்ட நிகழ்ச்சிகள்*

மார்க்சிசம்–லெனினிசம்–சிப்தாஸ் கோஷ் சிந்தனையாலும் உயர்ந்த மதிப்புகள் தார்மீக நெறிகளாலும் வழிநடத்தப்பட்டு நமது நாட்டில் இளைஞர்களின் உண்மையான புரட்சிகர போராட்ட இயக்கங்களை நடத்துவதற்காக அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கம் **1966** ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அத்தகைய போராட்ட இயக்கங்கள் பொருளாதார அரசியல் பிரச்சினைகளுக்காக மட்டுமல்லாது, குறிப்பாக நொடி தோறும் இளைஞர்களின் வாழ்க்கையை நசுக்கிவரும் அனைத்துவகையான கலாச்சார சீரழிவுகளிலிருந்து அவர்களைக் காக்கவும் நடத்தவேண்டும் என்ற இலட்சியத்திற்காகவும் இந்த இளைஞர் சங்கம் நிறுவப்பட்டது.

**50** ஆண்டுகாலமாக இளைஞர்களின் சமூக கலாச்சார இயக்கத்தை நடத்தி இன்று பல மாநிலங்களில் பரவி வளர்ந்துவரும் ஏஐடிஓய்ஓ வின் நிறுவன நாளான ஜூன் **26** ஐ இவ்வாண்டு நாடெங்கிலும் சிறப்பாக பல்வேறு நிகழ்ச்சிகளால் அனுசரிக்கப்பட்டது. சங்கத்தின் மத்திய அலுவலகம் அமைந்துள்ள **48**, லெனின் சாரணி , கொல்கத்தாவில் ஏஐடிஓய்ஓ வின் கொடியை இதன் பொதுச் செயலாளர் தோழர் பிரதிபா நாயக் ஏற்றிவைத்தார். நகரத்தின் மற்றொரு பகுதியான சரத் சதன், ஹவுராவில் ஆயிரக் கணக்கான இளைஞர்களின் முன்பு நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இன் மத்தியக் கமிட்டி உறுப்பினர் தோழர் சத்யவான் உரையாற்றினார். அனைத்து தீமைகளுக்கும் ஊற்றுக் கண்ணாக இருக்கும் கேடுகெட்ட முதலாளித்துவம் உருவாக்கும் பிரச்சினைகளை எதிர்த்து இளைஞர்கள் போராடாதவாறு அவர்களின் தார்மீக முதுகெலும்பை முறித்து ஆளுவோர் முடமாக்கி வைத்துள்ளானர் என்றும் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு முதலளித்துவத்தை அதிகாரத்திலிருந்து தூக்கி எறிவதில் தான் இருக்கின்றது என்றும் அவர் வலியுறுத்தினார்.

தமிழ்நாட்டிலும் சென்னை, நெய்வேலி, தேனி, வத்தலகுண்டு ஆகிய நகரங்களில் ஏஐடிஓய்ஓ நிறுவன நாளை ஒட்டி பல நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டன. சென்னையில் ஜூன் **26** அன்று சுதந்திரப் போராட்டத்தில் சமரசமற்ற பாதையை பிரதிபலித்த பகத்சிங், நேதாஜி, பாரதியார் போன்றோரின் மேற்கோள்களையும் ஏஐடிஓய்ஓ சமீபத்தில் நடத்திய போராட்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்களையும் கொண்ட கண்காட்சி நாள் முழுவதும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. அதைப் பார்வையிட்ட பல இளைஞர்கள் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து பல்வேறு புத்தகங்களையும் வாங்கிச் சென்றனர். ஜூன்28 அன்று இளைஞர்களின் பொதுக் கூட்டமும் நடத்தப்பட்டது. கூட்டத்திற்கு ஏஐடிஓய்ஓ மாவட்டத் தலைவர் தலைமைதாங்க எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) இன் மாவட்டச் செயலாளர் தோழர் நந்தகுமார் இளைஞர்கள் எடுக்க வேண்டிய பல்வேறு வகையான இயக்க வடிவங்களை விளக்கினார்.

வத்தலகுண்டு நகரத்தில் எற்பாடு செய்த ஏஐடிஓய்ஓ கூட்டத்தில் மதுரை–திண்டுக்கல்–தேனி மாவட்ட ஏஐடிஓய்ஓ பொறுப்பாளர் தோழர் யோகராஜன் தலைமை தாங்கினார். இன்றைய வேலையின்மைப் பிரச்சினைக்கு அடிப்படை காரணமான பொருளாதார உற்பத்தி முறையையும் உற்பத்தி உறவையும் விளக்கி யுரைத்தார். சிறப்புரையாற்றிய ஏஐடிஓய்ஓ மாநிலத் தலைவர் தோழர் ராஜகோபால், இளைஞர்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளிக்கும் வகையில் விவாதத்தை நடத்தினார். எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) இன் வத்லகுண்டு பொறுப்பாளர் தோழர் உதயன் இளைஞர்கள் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டிய தேவையை விளக்கினார்.

தேனி நகரில் இளைஞர்களின் கூட்டம் வேலையின்மையும் கலாச்சாரச் சீரழிவும் என்ற கருத்தரங்க வடிவில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆர்வமிக்க பல புதிய இளைஞர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். ஏஐடிஓய்ஓ வின் தேனி மாவட்ட அமைப்புக் கமிட்டி உறுப்பினர் தோழர் முருகேசன் தலைமை தாங்க, மற்றொரு உறுப்பினரான தோழர் குமாரவேல் இளைஞர் சங்கத்தின் போராட்ட முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மாவட்டப் பொறுப்பாளர் தோழர் யோகராஜன், மாநிலத் தலைவர் தோழர் ராஜகோபால் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) இன் மாவட்டச் செயலாளர் தோழர் சத்தியமூர்த்தி ஆகியோர் கருத்தரங்கத்தில் வேலையின்மை, கலாச்சாரச் சீரழிவு, ஊரக விவசாயத்தின் நிலைமை போன்ற வெவ்வேறு தலைப்புகளில் கருத்துக்களை முன்வைத்தனர். பங்கேற்ற இளைஞர்கள் பல முக்கியமான கேள்விகளை முன்வைத்ததுடன் இதுபோன்றதொரு உண்மையில் உயர்ந்த சிந்தனையைப் பின்பற்றும் உயர்ந்த கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் சங்கத்தை தங்கள் பகுதிகளிலும் எடுத்துச் சென்று பரப்பு வோம் என்ற உறுதியுடன் உறுப்பினராக இணைந்தனர். காமாக்கப்பட்டியில் ஏஐடிஓய்ஓ வின் செயல்வீரர் பண்டியன் ஏற்பாடுசெய்த நிகழ்ச்சியில் அறிவியல் விவாதமும் பிறகு நேதாஜியின் போராட்டம் குறித்த குறும்படமும் மக்களுக்குக் காட்டப்பட்டன. நெய்வேலியில் நடந்த இளைஞர்கூட்டத்தில் தோழர் பாபு தலைமைதாங்க ஏஐடிஓய்ஓ வின் மாநில அமைப்புக் கமிட்டி உறுப்பினர் தோழர் ஏழுமலை சிறப்புரையாற்றினார்.

## சென்னை ஐஐடியில் அம்பேத்கர் பெரியார் படிப்பு வட்டத்தைத் தடைசெய்ததை ஏஐடிஎஸ்ஓ வன்மையாகக் கண்டிக்கிறது

மோடி அரசாங்கத்தின் இந்தி மொழிக் கொள்கை, இறைச்சிக்காக மாடுகளை வெட்டுதல், தாய்மதம் திரும்புதல் மற்றும் வேதக் கருத்துக்களை ஊக்குவித்தல் ஆகிய வற்றை விமர்சித்துக் கருத்துக்களை வெளியிட்டதற்காகவும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து விவாதங்கள் ஏற்பாடு செய்ததற்காகவும் தண்டனையாக சென்னை ஐஐடியில் செயல் பட்டுவரும் அம்பேத்கர் பெரியார் படிப்பு வட்டத்தின் மீது மத்திய மனிதவளத்துறை தடைவிதித்திருப்பதை வன்மையாகக் கண்டித்து ஏஐடிஎஸ்ஓவின் பொதுச் செயலாளர் தோழர் அசோக் மிஸ்ரா **30–5–2015** அன்று வெளியிட்ட அறிக்கையில், அரசாங்கத்திற் கெதிராக விமர்சனங்கள் செய்பவர்கள் மீது எவ்வித சகிப்புத் தன்மையுமின்றி மூர்க்கத்தனமாக மோடி அரசாங்கம் செயல்பட்டு வருகிறது என்று மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார். சமூக பிரச்சினைகள் குறித்து மனம்திறந்த வெளிப் படையான விவாதங்கள் நடத்து வதற்கான வாய்ப்புகள், பேச்சுரிமை ஆகியவற்றை மறுப்பதன் மூலம் அது தனது பாசிச குணத்தை வெளிப்படுத்தி வருகிறது என்றும் குறிப் பிட்டுள்ளார். மக்கள் என்ன பேச வேண்டும், என்ன சாப்பிட வேண்டும் என அனைத் தையும் இனிமேல் பிஜேபி, ஆர்எஸ்எஸ் சங்கப் பரிவாரத் தலைவர்கள்தான் தீர்மானிப் பார்கள்! பேச்சுரிமை மற்றும் ஜனநாயகத்தின் இந்தக் கொடுந்தாக்குதலை ஏஐடிஎஸ்ஓ வன்மையாகக் கண்டிப்பதுடன் பொதுமக்கள் குறிப்பாக மாணவர் சமுதாயம் இவற்றிற் கெதிராக தங்களின் எதிர்ப்புக் குரலை வலிமையாக்க வேண்டி அறைகூவல் விடுத்திருக்கிறார்.

## சொத்து குவிப்பு வழக்கில்...

*5ம் பக்கத் தொடர்ச்சி*

குற்ற வழக்குகளிலிருந்து விடுவிக்கப்படுவது மக்களுடைய இந்த எண்ணத்தில் மண்ணை வாரிப்போடுவதாகத்தான் அமைகிறது.

இதற்கு என்னதான் தீர்வு என்ற கேள்விதான் அடுத்தபடியாக மனதை அலைக்கழிக்கிறது. நீதித்துறையின் பாகுபாட்டையும் ஊழலையும் எப்படித்தான் ஒழிப்பது? இக்கொடுமைகளுக்கான வேராக இருப்பது முதலாளித்துவ சமூக அமைப்புமுறைதான் என்றால் இவ்வமைப்பு முறையை வேரறுப்பதற்கான அவசியத்தில்தான் இக்கொடுமைகளுக்கான தீர்வு இருக்கிறது. ஆனால், சரியானதொரு புரட்சிகரத் தலைமை யின்கீழ் வரலாற்றுரீதியாக தீர்மானிக்கப்பட்ட போக்கில் நடத்தப்படும் போராட்டத்தின் முடிவில்தான் இவ்வமைப்புமுறையை மாற்றுவ தென்பது நிகழும். ஆனால், சரியானதொரு புரட்சிகரத் தலைமையின்கீழ் உயர்ந்த கலாச்சாரம் மற்றும் அறநெறிகளின் அடிப்படையில் அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்களையும் அணிதிரட்டி சோசலிச புரட்சியை நோக்கிய ஜனநாயக வெகுஜன, வர்க்கப் போராட்டங்களை பரந்துபட்ட அளவில் வளர்த்தெடுத்து முதலாளித்துவ அரசை தூக்கியெறிந்தால்தான் அமைப்புமுறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தமுடியும். ஆனால் அத்தகைய புரட்சிகரமான மாற்றம் நிகழும்வரையில் அரசியல் பின்னணி, அந்தஸ்த்து, செல்வாக்கு ஆகியவற்றை பார்க்காமல் சட்டம் தனது கடமையை சரியாகச்செய்து குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கவேண்டும் என்று நாம் நீதித்துறையிடம் எதிர்பார்ப்போமானால், அதற்கு மக்கள் சக்தியின் நிர்ப்பந்தமும் நீதித்துறையின் மீது மக்களின் கண்காணிப்பும் இடையறாது தேவைப்படும். இத்தகைய நிர்ப்பந்தமும் கண்காணிப்பும் வழங்கக்கூடிய வகையில் மக்களின் ஒன்றுபட்ட பேரியக்கங்களை கட்டினாலன்றி நீதிமன்றங்கள் நியாயம் வழங்கும் என்று எதிர்பார்க்கமுடியாது

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்*

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucic.in